T. 673.

# VAKYA ILAKKANA CHINTHAMANI.

A Tamil Grammar

BY

C. R. GOVINDARAJA MUDALIAR,

TAMIL PANDIT,

*Puchaiyappa's College.*

PUBLISHED BY

A. MAHADEVA CHETTI,

MADRAS.

PRINTED AT

K. R. PRESS, MADRAS.

1912.

**All Rights Reserved.**

**Price Annas 4.**

ஸ்ரீ

# வாக்கிய இலக்கண சிந்தாமணி.

இது

பச்சையப்பமுதலியார் கலாசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

இயற்றப்பெற்று,

அக்கம்மாள்பேட்டை

இராமாநுஜசெட்டியார் குமாரர்

அ. மகாதேவசெட்டியாரால்

சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்[illegible]

[முதற்பதிப்பு.]

1912.

[Copyright Registered.]

விலை அணு 4.] [Price As. 4.

ஸ்ரீ

# முகவுரை.

தமிழ்மொழியைப் பயிலுஞ் சிறு மாணவர்க்கென இப்பொழுது வசனத்தில் ஏற்பட்டுள்ள இலக்கணங்களை அவைகள் அமைந்துள்ள வகையினின்று மாற்றி வேறு வகையின் எழுதவேண்டுமென்று பல நாட்களாக எண்ணியிருந்தேன். ஆயினும் எனக்கு அங்ஙனஞ் செய்தற்குரிய சாவதானமும் அநுகூலமும் வாய்த்திலாமையின் அங்ஙனஞ் செய்து முடித்தற் கியலாதவனா யிருந்தேன். சென்ற இரண்டு வருஷங்களுக்குமுன் தேசபாஷைகளில் வியாசமெழுதுதல் மாணவர்களுக்குக் கட்டாயப் பாடங்களிலொன்றா யேற்படுத்தப்பட்டமை எனக்குத் தெரிந்தபிறகு முன்னிருந்த எண்ணத்தைமாற்றி மாணவர்கள் வாக்கியங்களை வகைபெறவரையும் வழிகளை யறிதற்குரிய இலக்கணமொன்றை எழுதவேண்டுமென் றெண்ணி யான் பலநாட்களாக வாக்கியங்களைப்பற்றிக் குறித்துவந்த வகைகளையெல்லா மொருங்குதிரட்டி இந்நூலை யெழுதத் தொடங்கினேன். அங்ஙனந் தொடங்கியபோது தமிழ்ப் பாடத்தை விருப்பமான பாடங்களி லொன்றாக எடுத்துக்கொண்ட மாணவர்களுக்கே யன்றி அங்ஙனம் எடுத்துக்கொள்ளாத மாணவர்களுக்கும் வியாசமெழுதுதல் கட்டாயப் பாடமாக ஏற்பட்டிருத்தலையும், எழுத்தைப்பற்றியும் சொல்லைப்

பற்றியும் ஒன்றுந் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு வாக்கிய வகைகளை யுணர்ந்து எழுதுதல் கூடாமையையும் உன்னி வாக்கிய வகைகளை யுணர்தற்கு வேண்டிய அளவாகவும், மாணவர்கள் சொற்பகாலத்திற் படித்தறிந்துகொள்ளும் படியாகவும் அவ்விரண்டிலக்கணங்களையுஞ் சொற்பமாக முன்னேயமைத்து இந்நூலை யெழுதிமுடித்தேன். இந்நூலி லுள்ள உ௫-ம் பக்கமுதல் ௬௬-ம் பக்கம்வரையினும் வாக்கியத்தைப்பற்றியுள்ள விஷயங்களே யான் அவ்வப் போது வாக்கியத்தைப்பற்றி குறித்துவைத்திருந்து எழுதிய விஷயங்களாகும். ௬௫-ம் பக்கத்திலுள்ள தனிநிலை வாக்கியம், தொடர்நிலை வாக்கியம், கலப்பு வாக்கியம் என்பன, (Simple sentence, Complex sentence, Compound sentence) என்பவற்றின் மொழிபெயர்ப் பாகத் தமிழில் வழங்குகின்றன. ௬எ-ம் பக்கத்தில் உள்ள நேர்நிலையுண்மொழி, நேர்நிலையின்மொழி என்னும் இருவகை வாக்கியப் பெயர்களையும் அவற்றின் இலக்கணங் களையும் (Direct speech, Indirect speech) என்பவற்றை நோக்கிப் புதுவனவாக எழுதிச் சேர்த்தேன். மற்றையவை நன்னூலிற் பொதுவியலி லுள்ளவைகளே. வாக்கிய இய லுக்குமுன் அமைந்துள்ள எழுத்திலக்கண முதலியவற்றுள் ளுஞ் சில புதியவகைகள் உள்ளமை அவற்றைக் கவனிப் பார்க்கு விளங்காமற் போகாது. பாடசாலைகளிலுள்ள தமி ழ்ப் பண்டிதர்கள் இதனை மாணவர்களுக்குப் பயன்படும் படி செய்து எனக்கிதுபோன்ற விஷயங்களில் ஊக்கத்தை யுண்டாக்கக் கோருகின்றேன். இதனைச் சுத்தமாக அச்சிட்

டுத்தந்த கலாரத்நாகரம் அச்சியந்திரத்தலைவர் ஸ்ரீமான் இரத்தினசபாபதி செட்டியாரவர்கட்கும், இதனை அன்புடன் வெளியிட்ட தமிழபிமானமிக்க ஸ்ரீமான் அ. மகாதேவ செட்டியாரவர்கட்கும் வந்தனம் புரிகின்றேன். தமக்குள்ள பலவேலைகளுக் கிடையில் இந்நூலை யன்புடன் கவனித்துத் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்த வித்துவசிரோமணிகளுக்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு மனமுவந்த வந்தனத்தையன்றி வேறு யாதுளது.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

என்பது பெரியார் வாக்கன்றே. இதில் என் சிற்றறிவிற்குத் தோன்றாமல் உளவாங் குற்றங்களை யுலகம்பொறுக்கவெனப் பலவும் பிரார்த்திக்கின்றேன்.

"சொல்லின் கூட்டமும் பொருளின் கூட்டமும்
அவ்விரண் டனையு மளவிடப் படாவே."
அவற்றுள்,

"சிறிதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தன னன்றியீ தொருநூ லன்றே"

"இவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
இவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே."

இங்ஙனம்,
கா. ர. கோ.

# OPINIONS.

**From M. R. Ry. Rao Sahib T. Ramakrishna Pillai Avl., B.A., F.R.H.S., F.M.U., Interpreter, High Court, Madras; Chairman of the Tamil Board Examiners to the University of Madras,' (13-4-1912)**—"I have gone through Mr. C. R. Govindaraja Mudaliar's **Vakya Ilakkana Chintamani** and find it is a really useful work. **I** hope the students will read the book to their advantage and freely use it.

Mr. C. R. Govindaraja Mudaliar who is a Tamil Pandit on the Staff of the Pachaiyappa's High School, deserves every encouragement for the work he is doing in connection with Tamil."

**From M. R. Ry. K. V. Subbaiya Avl., M.A., L.T., M.R.A.S, (Lond), Professor of English, Presidency College, Madras, and a Member of the Dravidian Board of Studies to the University of Madras, (27-4-1912)**—"I have very great pleasure in recommending to the student population the **"Vakya Ilakkana Chintamani"** of Pandit C. R. Govindaraja Mudaliar. The author is a Pandit in the Pachaiyappa's College, Madras; and I am sure he should have found the publication of such a book as this is highly necessary for the successful teaching of Tamil, from his long experience as a Tamil Pandit of the High School Classes."

**From M. R. Ry. S. Anavaratavinayakam Pillai Avl., M. A., L. T., Lecturer in Tamil, Madras Christian College, Madras, (15-4-1912)**—"Your Tamil booklet "**Vakya Ilakkana Chintamani**" is a welcome addition to the existing Tamil Grammars as dealing with the structure of sentences in detail. You have prefaced your "**Vakya Ilakkanam**" with the rudiments of Tamil Grammar (Orthography & Etymology) and I think you have done well. But as I told you in person, there is much room for improvement. The rules of sandhi, for instance, have been omitted. Still taking the booklet as it is I can assure you that it will be found useful by the class of students for whom it is intended."

# அபிப்பிராயங்கள்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துக் கௌரவ அங்கத்தினரும்,
யூனிவர்சிட்டி திராவிட போர்டின் அங்கத்தினருள்
ஒருவருமாகிய மஹாமஹோபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ
உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்
அபிப்பிராயம்:

வாக்கிய இலக்கண சிந்தாமணி என்னும் இப்புஸ்தகத்திற் சிலபகுதிகளைப் படித்துப் பார்த்தேன். மாணாக்கர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளும்பொருட்டு இது மிகவும் எளிய நடையில் விளங்க எழுதப்பெற்றிருக்கின்றது.

வாக்கியங்கள் இன்ன இன்ன விதமாக இருக்கவேண்டுமென்பதை உதாரணமுகமாக விளக்கியிருப்பதும், வாக்கிய இலக்கணத்துக்கு அங்கமாக எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் முதலில் எழுதிச் சேர்த்திருப்பதும் மிகவும் திருப்திகரமாக இருக்கின்றன.

வசன நடையை எழுதக் கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு இப்புத்தகம் தக்க கருவியாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்த் தலைமைப்பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கௌரவ அங்கத்தினரும் ஆகிய
ஸ்ரீ. உ. வே. கா. ஸ்ரீ. கோபாலாசாரியரவர்கள்
அபிப்பிராயம்.

தாங்கள் கொடுத்த வாக்கிய இலக்கண சிந்தாமணியை ஒருவாறு படித்துப் பார்த்தேன். தாங்கள் விரும்பிய வண்ணம் அதன் விஷயமாக எனக்குத் தோன்றும் அபிப்பிராயம் இது.

தாங்கள் வைத்திருக்கிற சொல்லிலக்கணம் முதலியவற்றின் முறைவைப்பும் அவ்வவ் விலக்கணங்களின் விதி விளக்கமும் உதாரணங்களும் ஆங்காங்குக் காட்டியிருக்கும் குறிப்புக்களும் ஏற்புடையனவா யிருப்பதோடு, வாக்கிய இலக்கணம் என்னும் பகுதியில் எடுத்துக்காட்டியிருக்கும் இலக்கண விஷயங்கள் இக்காலம் சிறிய வகுப்புக்களில கல்விபயிலும் சிறுவர் சட்டுரையெழுதும் செய்கையில் அவர்க்குப் பயன்செய்வனவா யிருக்கின்றன.

சென்னை, கோமளேசுவரன்பேட்டை
சச்சிதானந்தம் பிரஸ், லோகோபகாரி பத்திரிகை,
சக்கரவர்த்தினி பத்திரிகை ஆகிய இவற்றின் அதிபரும்,
திருக்குறள் பரிமேலழகருரையின் விளக்கவுரை யாசிரியரும்,
தர்க்க வேதாந்த வித்துவசிரோமணியும்,
சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதரும் ஆகிய
ஸ்ரீமான். கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
அபிப்பிராயம்.

சென்னை, பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான். கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் எழுதிய வாக்கிய இலக்கண சிந்தாமணி யென்னும் புத்தகத்தை முற்

றும் நவலையாய்ப் படித்துப் பார்த்தேன். இப்புத்தகத்தில் மாணுக்கர்கள் இன்றியமையா தறியத்தக்க இலக்கணக் குறிப்புகளோடு வாக்கியம் வரையும் வகைகள் செப்பமாக எழுதப்பட் டிருக்கின்றன. கல்வி யபிவிருத்தியின்பொருட்டு இப்புத்தகத்தைப் படிப்பவர் தவறின்றி வாக்கியம் வரையும் வகையை நன்குணர்வா ரென்பது என தபிப்பிராயம்.

### சென்னை, பச்சையப்பமுதலியார் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பூ. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் மாணவரு ளொருவராகிய பாலசரசுவதி - வித்துவான் - ஸ்ரீமான். ஆரணி. மே. சென்னகேசவுலு நாயுடவர்கள் அபிப்பிராயம்.

எனதாப்த சிகாமணியாகிய ஸ்ரீமான். கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள் இயற்றிய வாக்கிய இலக்கண சிந்தாமணி யென்னும் வசனநூலைப் பார்த்தேன். அது இக்காலத்திற் கவசியமானதாகவும், சிறுவர்கட்கும் இலக்கணவுணர்ச்சியில்லாத ஏனையோருக்கும் எழுதுதற்கும் திருத்தமாய்ப் பேசுதற்கு முரியவழிகளை நன்கு விளக்கக் கூடியதாகவு மிருக்கின்றது. "விளக்கழற் கொழியா வெண்மதிக்ககலா விரிதிரைக் கருங்கடன் முகட்டின், முளைத்துயர் பசும்பொன் வரைவலம் திரியு மோட்டுவெங் கதிரவர்க்கேகா, உளத்திருள் கடியும்" என்றபடி இந்நூல், இதனைப் பயில்வோர் சிறுவர் சிறுமியர்முதல் யாவரேயாயினும் அவர்களை இலக்கணத்தில் வல்லவர்களாகும்படி செயும் என்பது என தபிப்பிராயம்.

## சென்னை திராவிடவேத மஹாசபை ஸ்தாபகரும் ஸ்ரீவிஷ்ணுபாத சேகரருமாகிய ஸ்ரீமான் - வித்துவான் - ஜா. பசுபதிநாயகரவர்கள் அபிப்பிராயம்.

சென்னை பச்சையப்பமுதலியார் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதராகிய எமதன்பார்ந்த ஸ்ரீமான். கா. ர. கோவிந்தராஜ முதலியாருக்கு,

ஐயா !

நீவிரன்புகூர்ந்து தந்த வாக்கிய இலக்கண சிந்தாமணி யென்னும் புத்தகமானது நுமது கருத்திற்கிணங்கப் பாக்கிய விலக்கணஞ் சிறந்து எவருக்கும் விரும்பியவற்றை யளிப்பதாகி விண்ணகத்தே யொளிருஞ் சிந்தாமணியைப்போல வாக்கியவிலக்கணஞ் சிறந்து மாணவருக் கின்றியமையாத இலக்கணங்களை யெளிதி லளிக்கத் தக்கதாகி இம்மண்ணகத்தே யொளிரத்தக்கதா யிருத்தலின் இதற்குச் சிந்தாமணி யென்னுஞ்சொல்லை இறுதியிற் புணர்த்தி வாக்கிய இலக்கன சிந்தாமணியெனப் பெயர் புனைந்தது சாலப்பொருத்தமுளதே. ஆகையா லிந்நூல் இந்நிலவுலகிற் சிறந்தோங்குமென்ப தெமதபிப்பிராயம்.

### காப்பியக்கலித்துறை.

வாக்கிய விலக்கண சிந்தா மணியினை வளப்பமொடிங்
காக்கிய புலவனங் கோவிந்த ராசனை யளித்தவர்செய்
பாக்கிய மதுவலோ பாக்கிய மாமிதைப் படித்துளக்கண்
ணோக்கியவருக்கலோ தோன்றுமியற்றமிழ் நுணுக்கங்களே.

ஸ்ரீ

# வாக்கிய இலக்கண சிந்தாமணி.

## தற்சிறப்புப்பாயிரம்.

அணிமலர்ப் பொழில்சூ ழாரெழிற் குருகையெம்
இணையறு சிறுமுனி யிணையடி பணிகுவென்
வாக்கிய விலக்கணம் வகுத்தனென் சொலவே.

## நூல்.

வாக்கிய இலக்கண சிந்தாமணி என்பது மூன்றுசொல் இரண்டு சந்தியாலான சொற்றொடர். இது வாக்கியத்தினுடைய இலக்கணங்களைத்தருஞ் சிந்தாமணி என விரிக்கப்படும்; ஆதலின் இதிலுள்ள சந்திகள் இரண்டனுள் முன்னது ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரும், பின்னது இரண்டாம் வேற்றுமை யுருபும்பயனு முடன்றொக்க தொகைநிலைத்தொடருமாம். இலக்கணங்களைத் தருதலாவது இலக்கணங்களை யுணர்த்துதல். சிந்தாமணி என்பது தன்னிடமுற்றார்க்கு அவர்கள் விரும்பும் பொருள்களை யெல்லாந் தருவதொரு மணி என்ப. அது தேவலோகத்துள்ளதென்ப. அம்மணியின் பெயர் அதுபோல மாணவர்கள் விரும்பும் வாக்கிய இலக்கணங்களை விளக்கித்தரும் இந்நூலுக்கு உவமையாகுபெயராகிய காரணப்பெயராய் வந்ததென்க. இந்நூலில் எழுத்தைப்பற்றியும் சொல்லைப் பற்றியும் சிறிது சிறிது இலக்கணங் கூறப்பட்டிருப்பினும் மிகுதியாகக் கூறப்பட்ட இலக்கணம் வாக்கியத்தைப்

பற்றிய தாகலான் இதற்கு வாக்கிய இலக்கண சிந்தாமணி என்னும் பெயர் மிகுதிபற்றியதா மென்க; எதுபோலு மெனின் பிறமரங்க ளிருப்பினுங் கமுகமர மிக்க தோட்டத்தைக் கமுகந்தோட்ட மென்பதுபோலு மென்க. இங்ஙன நூலுக்குப் பெயர்வருதலா மென்பதனை,

"முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் றன்மைமுத னிமித்தினு
மிடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே."

என்பதனுலறிக.

பஞ்சால் நூலும், நூலால் துணியும் ஆக்கப்படுதல் போல எழுத்தால் சொல்லும், சொல்லால் வாக்கியமும் ஆக்கப்படுதலின் முன்னே அவ்வெழுத்திலக்கணத்தையும், சொல்லிலக்கணத்தையும் முறையே உணர்ந்தாலன்றி வாக்கிய இலக்கணத்தை நன்குயுணர்தல் கூடாமையின் அவற்றின் இலக்கணங்களை முதலிற் சுருக்கிக்கூறிப் பிறகு வாக்கிய இலக்கணங் கூறுவாம்.

## எழுத்திலக்கணம்.

(1) எழுத்தாவது மொழிக்குக் காரணமும், ஒலி வடிவ அணுக்களின் காரியமும் ஆகிய ஒலியேயாம்.

(இவ்வொலிக்கு இவ்வெழுத்தென்னும் பெயர் வரிவடிவில் எழுதப்பட்டதனுல் உண்டானதென்க.

இதனுல் எழுத்தென்பது இன்னதென்பதும், அதற்கு அப்பெயர் உண்டானதற்குக் காரணம் இதுவென்பதும் பெறப்பட்டமையறிக.)

(2) தமிழ் மொழியின் எழுத்துகள் உயிரெழுத்து, மெய் எழுத்து, ஆய்தவெழுத்து, உயிர்மெய் எழுத்து என நான்கு வகைப்படும்.

(இங்குத் தமிழ்மொழி என்றது தமிழ்ப்பாஷையை. இஃது இப்பொருளுடையதாதலைத் தென்மொழி, வடமொழி என்பவற்றாலறிக.)

உயிர்.

(3) அவற்றுள்,

உயிரெழுத்துப் பன்னிரண்டாம்.

(வருமாறு.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

(உயிரைப்போலத் தாமாகவே ஒலிக்கும் எழுத்துகளாதலால் இவை உயிரெழுத் தெனப்பட்டன.)

(4) இவ்வுயிரெழுத்துகளுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகி ஒலித்தலால் குற்றெழுத்து, குறில எனப்படும்.

(5) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நீண்டு ஒலித்தலால் நெட்டெழுத்து, நெடில் எனப்படும்.

மெய்.

(6) மெய்யெழுத்துப் பதினெட்டு.

(வ-று.) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

(மெய்யைப்போல உயிரெழுத்தின் உதவியைப்பெற்றன்றி ஒலிக்காத எழுத்துகளாதலின் இவை மெய்யெழுத் தெனப்பட்டன.)

(7) இம் மெய்யெழுத்துகளுள்,

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிந்த ஓசையுடையன வாதலால் வல்லினம், வன்மை, வன்கணம் எனப்படும்.

(8) ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெலிந்த ஓசை யுடையனவாதலால் மெல்லினம், மென்மை, மென் கணம் எனப்படும்.

(9) ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் மேற்சொன்ன இரண்டினுக்கும் இடைத்தரமான ஓசையுடையனவாதலால் இடையினம், இடைமை, இடைக்கணம் எனப்படும்.

## ஆய்தம்.

(10) ஆய்தவெழுத்து ஒன்று. அது மூன்று புள்ளி வடிவினதாய்க் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்துக்கு மேலும் வரும்.

(வ - று.) கஃசு, அஃது, இருபஃது.

(ஒருவகை ஆய்தம்போன் றிருத்தலால் இஃது ஆய்தவெழுத் தெனப்பட்டது.

இதனோடு ஒப்பிடும் ஆய்தம் கேடயம் என்பர். சிலர் அடுப் பின் கொம்மை எனவுங் கூறுவர்.)

## உயிர்மெய்.

(11) உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப்பதினாறு.

(உயிரெழுத்தும் மெய்யெழுத்துங் கூடி யுண்டாகின்றமையால் இவை உயிர்மெய்யெழுத் தெனப்பட்டன.

ஒவ்வொரு மெய்யும் பன்னிரண்டு உயிரோடுங்கூடிப் பன்னிரண்டு உயிர்மெய் எழுத்தாம்.)

(வ - று.) க்+அ=க, க்+ஆ=கா, க் + இ=கி, க் + ஈ = கீ, க்+உ=கு, க்+ஊ=கூ, க் + எ=கெ, க் + ஏ=கே, க்+ஐ = கை, க் + ஒ = கொ, க் + ஓ = கோ, க் + ஔ = கௌ.

(இங்ஙனம் பதினெட்டு மெய்யும் பன்னிரண்டு உயிரோடு கூடப் பதினெட்டுப் பன்னிரண்டு இருநூற்றுப்பதினறு உயிர்மெய் யெழுத்தாம்.)

(12) அ, இ, உ என்னும் இம்மூன்று குற்றுயிரும் பொருளைச் சுட்டிக்காட்டும் பொருளில் வந்தால் சுட்டெழுத் தெனப்படும். (சுட்டல் - குறித்தல்.)

(வ - று.) அவன், அம்மனிதன்.
இவன், இம்மனிதன்.
உவன், உம்மனிதன்.

(13) ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிரெழுத்துகள் நான் கும், யா என்னும் உயிர்மெய் எழுத்தும் வினப்பொருளில் வந்தால் வினவெழுத் தெனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (வ - று.) அவனா | ... | எவன் | ... | எங்ஙனம். |
| அவனே | ... | ஏவன் | ... | |
| அவனோ | ... | யாவன் | ... | யாங்ஙனம். |

(14) உகரம் குற்றியல் உகரம், முற்றியல் உகரம் என இருவகைப்படும்.

(இங்ஙனம் உகரம் ஒன்றே இருவகையாதற்குக் காரணம் அது தனக்குரிய ஒருமாத்திரை என்னும் கால அளவிற் குறைந்து ஒலித்த லும், குறையாமல் ஒலித்தலுமாம்.)

(15) அவற்றுள், குற்றியல் உகரமாவது ஒரு நெட் டெழுத்தும் ஒரு குற்றெழுத்துமாகிய இரண்டெழுத்து களாலேனும், அல்லது இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்துகளாலேனும் ஆக்கப்பட்ட மொழியின் ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரமாம்.

| | | |
|---|---|---|
| (வ - று.) ஆறு | ... | சுக்கு. |
| நாடு | ... | படகு. |

(16) அஃது ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்தை நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகைப்படும்.

(இவ்வாறுவகையில் நெடிற்றொடர் ஒன்றே இரண்டெழுத்தாலான மொழியாம்; மற்றைய தொடர்கள் யாவும் இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்துகளாலான மொழிகளாகவே இருக்கும்.)

(*a*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து, தனி உயிர் நெட்டெழுத்தாகவேனும், தனி உயிர்மெய் நெட்டெழுத்தாகவேனும் இருந்தால் அது நெடிற்றொட ரெனப்படும்.

(வ - று.) ஆறு, நாடு.

(*b*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து உயிர்மெய்க் குற்றெழுத்தாகவேனும், உயிர்மெய் நெட்டெழுத்தாகவேனும் இருந்தால் அது உயிர்த்தொடர் எனப்படும்.

(வ - று.) படகு, பலாசு.

(இதில் அவ்வுயிர்மெய் எழுத்தைப் பிரித்தால் ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்தாயிருப்பது உயிரெழுத்தாகையால் உயிர்த்தொடர் எனப்பட்டது.

உயிர்மெய் எழுத்துச் சில இடங்களில் ஓரெழுத்தாகவும், சில இடங்களில் இரண்டெழுத்தாகவுங் கொள்ளப்படும். இங்கு இரண்டெழுத்தாகக் கொள்ளப்பட்டது. 'நாடு' என்ற நெடிற்றொடரில் ஓரெழுத்தாகக் கொள்ளப்பட்டமை யறிக.)

(*c*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து ஆய்த எழுத்தாக இருந்தால் அஃது ஆய்தத்தொடர் எனப்படும்.

(வ - று.) அஃது, இருபஃது.

(*d*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து வல்லின மெய்யாக இருந்தால் அது வன்றொடர் எனப்படும்.

(வ - று.) சுக்கு, பட்டு.

(*e*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து மெல்லின மெய்யாக இருந்தால் அது மென்றொடர் எனப்படும்.

(வ - று.) பஞ்சு, வண்டு.

(*f*) ஈற்றெழுத்துக்குப் பக்கத்து எழுத்து இடையின மெய்யாக இருந்தால் அஃது இடைத்தொடர் எனப்படும்.

(வ - று.) சார்பு, மல்கு.

(17) குற்றியல் உகரத்துக்குச் சொன்ன இலக்கணத்தின் வேறுபட்டு வரும் உகரம் முற்றியல் உகரமாம்.

(குற்றியல் உகரம் மொழிக்கீற்றிலேயே வரும். அதற்கு உதாரணம் முன்னே காட்டப்பட்டது. முற்றியல் உகரம் மொழியின் முதல், இடை, கடை என்னும் மூன்றிடத்திலும் வரும்.)

(வ - று.) கு, நடு, குடம், நடுகை, வரவு, தேய்வு.

எழுத்திலக்கண முற்றிற்று.

## சொல்லிலக்கணம்.

### சொற்களின் பொதுவிலக்கணம்.

(18) எழுத்துகள் தனித்தேனும், இரண்டு முதலாகத் தொடர்ந்தேனும் இருதிணை ஐம்பாற்பொருள்களை மூன்றிடத்துநின்று உணர்த்தினும் சொல்லெனப்படும்.

ஓரெழுத்தாலான சொல் ஓரெழுத்தொருமொழி எனவும், இரண்டு முதலாகத் தொடர்ந்த எழுத்துகளாலான சொல் எழுத்துத்தொடர்மொழி எனவுங் கூறப்படும்.

(ஓரெழுத் தொருசொல், எழுத்துத் தொடர்சொல் என்னுமல், ஓரெழுத்தொருமொழி, எழுத்துத்தொடர்மொழி என்றது சொல்லின்பநோக்கி.)

சொல், மொழி, உரை, மாற்றம், பதம் என்பன ஒரு பொருளன வெனவறிக.

(19) திணை என்பதற்குக் குலம் என்பது பொருள். திணை இரண்டாவன - உயர்திணை, அஃறிணை என்பனவாம்.

உயர்திணை - உயர்வாகிய திணை.

அஃறிணை - (உயர்வு) அல்லாததாகிய திணை.

(a) மனிதர்களும், தேவர்களும், நரகலோகவாசிகளும் உயர்திணைப்பொருள்கள் எனப்படுவர்.

(b) உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய மற்ற எல்லாப் பொருள்களும் அஃறிணைப்பொருள்கள் எனப்படும்.

(20) பால் என்பதற்குப் பகுப்பு என்பது பொருள். பால் ஐந்தாவன - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பனவாம்.

(21) இவற்றுள்: ஆண், பெண், பலர் என்னும் மூன்றும் உயர்திணைக்கும்; ஒன்று, பல என்னும் இரண்டும் அஃறிணைக்கும் உரியனவாம்.

(வ-று.) பொன்னன் - ஆண்பால்
பொன்னி - பெண்பால்
குழையர் - பலர்பால்
} உயர்திணை.

அது, குழையது - ஒன்றன்பால்
அவை, குழையன - பலவின்பால்
} அஃறிணை.

(22) மூன்றிடமாவன: தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாம்.

(23) இவற்றுள், தன்மை : பேசுவோன் ; முன்னிலை: அதை முன்னின்று கேட்போன் ; படர்க்கை: அவ்விருவராலும் பேசப்படும் மற்ற எல்லாப் பொருள்களுமாம்.

(24) சொல் பொருளை யுணர்த்தும்போது குறிப்பாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தும்.

(25) குறிப்பாக உணர்த்துவதாவது - ஒருசொல், பொருளைத் தானே யுணர்த்துதலின்றி வேறொன்றன் குறிப்பினால் உணர்த்துவதாம்.

(வ - று.) பாவை வந்தாள். இதில் (பதுமை என்னும் பொருளதாகிய) பாவை என்னுஞ் சொல் வந்தாள் என்னும் சொல்லின் குறிப்பால் பாவைபோல்பவளாகிய பெண்ணை யுணர்த்தினமை யறிக.

(26) வெளிப்படையாக உணர்த்துதலாவது - ஒரு சொல், பொருளைத்தானே வேறொன்றன் துணைவேண்டாமல் உணர்த்துவது.

(வ - று.) பொன், மண்.

(இச்சொற்களின் பொருளை யறிதற்கு வேறொன்றன் சகாயம் வேண்டாமை யறிக.)

சொற்களின் பொதுவிலக்கண
முற்றிற்று.

## பெயர்ச்சொல்லிலக்கணம்.

(27) தமிழ் மொழியிற் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாம்.

அவற்றுள்,

(28) பெயர்ச்சொல்லாவன - எட்டு வேற்றுமைகளும் சார்தற்கிடனாய், வினையாலணையும்பெயர் அல்லாதவை காலத்தைக் காட்டாமற் பொருளை யுணர்த்திவருவனவாம்.

(வ - று.) கல், மண், பொன்.

(29) பெயர்கள் திணைவகையினால் உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர் என இருவகையாம்.

(வ - று.) பொன்னன் - உயர்திணைப்பெயர். மணி - அஃறிணைப் பெயர்.

(30) பால் வகையினால் ஆண்பாற்பெயர், பெண்பாற் பெயர், பலர்பாற்பெயர், ஒன்றன்பாற்பெயர், பலவின்பாற் பெயர், என ஐந்துவகையாம்.

(அவற்றுள், ஆண், பெண், பலர் என்னு மூன்றும் உயர்திணைக் கும்; ஒன்று, பல என்னும் இரண்டும் அஃறிணைக்கும் உரியன. இவ் விதி பிற்கூறப்படும் வினைமுற்றுக்கும் பொருந்தும்.)

(வ-று.) குழையன் - ஆண்பாற் பெயர்.
குழையள் - பெண்பாற் பெயர்.
குழையர் - பலர்பாற் பெயர்.
} உயர்திணைப் பெயர்.

குழையது - ஒன்றன்பாற் பெயர்.
குழையன - பலவின்பாற் பெயர்.
} அஃறிணைப் பெயர்.

(31) இடவகையினால் தன்மைப்பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப்பெயர் என மூன்று வகையாம்.

அவற்றுள்,

(a) தன்மைப்பெயர்: தன்மையொருமைப்பெயர், தன் மைப்பன்மைப்பெயர் என இருவகையாம்.

(வ-று.) நான், யான் - தன்மையொருமைப் பெயர்கள்.
நாம், யாம் - தன்மைப்பன்மைப் பெயர்கள்.

(இவை நாங்கள், யாங்கள் எனவுமருவி வழங்கும்.)

(b) முன்னிலைப்பெயரும் முன்னிலையொருமைப்பெ யர், முன்னிலைப்பன்மைப்பெயர் என இருவகையேயாம்.

(வ-று.) நீ - முன்னிலை யொருமைப்பெயர்.
நீர், நீயிர், நீவிர், எல்லீர் - முன்னிலைப்பன்மைப்பெயர்.

(நீம் என்பதும் முன்னிலைப்பெயரே. இது நூற்களில் அருகி வழங்கப்பட்டிருக்கின்றது. இது கள் விகுதியோடுகூடி நீங்கள் என இப்பொழுது வழங்குகின்றது. நீர் என்பதே நீங்கள் என மருவியது என்றுங் கூறுவர்.)

(c) படர்க்கைப்பெயர்: ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐந்து வகையாம்.

இவற்றிற்கு உதாரணம் முன்னே காட்டப்பட்டன.

(இருதிணை ஐம்பால்கள், படர்க்கையிடத்து மாத்திரம் அறிய நிற்கும். தன்மை முன்னிலைகளில் அவற்றின் ஒருமைப் பன்மைப் பால்களே தோற்றும். இவ்விதி பெயர்ச்சொல் வினைச்சொல் என்னும் இரண்டிற்கு முரியனவாம்.)

(32) இடுகுறி, காரணம், காரணவிடுகுறி என்பனவற்றால் இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரணவிடுகுறிப்பெயர் என மூவகையாம்.

அவற்றுள்,

(a) இடுகுறிப்பெயராவது - காரணமின்றி ஒன்றற்கு இட்டகுறியாய் வரும் பெயர்.

(வ - று.) மரம், பனை.

(b) காரணப்பெயராவது - ஒன்றற்குக் காரணம்பற்றி வரும் பெயர்.

(வ - று.) பறவை, மண்வெட்டி, தச்சன்.

(c) காரணவிடுகுறிப்பெயராவது - காரணங்கருதியவழி அக்காரணமுடைய பலவற்றிற்குஞ் செல்வதாயும், காரணங்கருதாதவழி இடுகுறியளவாய் நின்று ஒரு பொருட்கே செல்வதாயுமுள்ள பெயர்.

(வ - று.) அந்தணன், முள்ளி, முக்கண்ணன்.

(33) பொது, சிறப்பு என்பனவற்றால் பொதுப் பெயர், சிறப்புப்பெயர் என இருவகைப்படும்.

அவற்றுள்,

(a) பொதுப்பெயராவது - பலபொருள்களுக்கும் பொதுவாய் வழங்கும் பெயர்.

(வ - று.) மரம், அணி, பாம்பு, விலங்கு, பறவை.

(b) சிறப்புப்பெயராவது - ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் வழங்கும் பெயர்.

(வ - று.) பனை, முடி, சாரை, வயமா, கருடன்.

(34) மரபு, ஆக்கம் என்பனவற்றால் மரபுப்பெயர், ஆக்கப்பெயர் என இருவகையாம்.

அவற்றுள்,

(a) மரபுப்பெயராவது - ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு வழங்கிவரும் பெயர்.

(வ - று.) மரம், பனை.
அவன், அவள்.

(b) ஆக்கப்பெயராவது-ஒரு பொருளுக்குத் தொன்று தொட்டு வழங்குதலின்றி இடையில் ஒருவரால் ஆக்கப் படும் பெயர்.

(வ - று.) பொன்னன்,
முட்டை.

(இவற்றுள், முட்டை என்பது சுப்பிரமணியருக்குப் பொய்யா மொழிப்புலவரால் உண்டான பெயர்.)

(35) எல்லாப் பெயர்களும் பொருட்பெயர், இடப் பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என அறுவகையாம்.

அவற்றுள்,

(*a*) பொருட்பெயராவது - பொருளை உணர்த்தும் பெயராம்.

(வ - று.) மனிதன், மாடு, குயில், மரம், கல்.

(*b*) இடப்பெயராவது - இடத்தைக் காட்டும் பெயராம்.

(வ - று.) கண்டம், தேசம், ஊர், வீடு, மேல், கீழ்.

(*c*) காலப்பெயராவது - காலத்தை யுணர்த்தும் பெயராம்.

(வ - று.) பிரபவ, ஆவணி, ஞாயிறு, நாழிகை, நிமிஷம், விநாடி, ரோகணி, அஷ்டமி.

(*d*) சினைப்பெயராவது - பொருள்களின் உறுப்புகளைக் காட்டும் பெயராம்.

(வ - று.) கை, கால், குளம்பு, கொம்பு, இறகு,
அலகு, இலை, பூ, பழம், வேர்.

(*e*) பண்புப்பெயராவது - பொருள்களின் குணத்தைக் காட்டும் பெயராம்.

(வ - று.) செம்மை, கருமை, தண்மை,
வெம்மை, நன்மை, தீமை.

(*f*) தொழிற்பெயராவது-இஃது இன்னதொழில் எனத் தொழிலை யுணர்த்தும் பெயராம்.

(வ - று.) நடத்தல், படித்தல், கூடல், பழகல்.

(36) சில வினைமுற்றுகள் பெயர்போல வேற்றுமையை யேற்றுப் பொருளை யுணர்த்துமானால் அவை வினையாலணையும்பெயர் எனப்படும்.

(வ - று.) வந்தவன் (இராமன்) வந்தவனை (க்கண்டேன்.) படித்தானை (ப்பார்த்தேன்.)

(விகுதிகளே காலங்காட்டும் வினைமுற்றுகள் வினையாலணையும் பெயராகா.)

(37) வேற்றுமையாவன - பெயர்ப்பொருளை வேறுபடுத்த வருவனவாம்.

(38) அவை முதல்வேற்றுமைமுதல் எட்டாம்வேற்றுமை இறுதியாக எட்டாம்.

(a) பெயரின் இயல்பே முதல்வேற்றுமையாம்.

(வ - று.) ராமன், மணி, பலகை.

(b) இரண்டன் உருபு ஐ என்பதேயாம்.

(வ - று.) இராமனை.

(c) மூன்றன் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாம்.

(வ - று.) ராமனால், ராமனான், ராமனொடு, ராமனோடு.

(d) நான்கன் உருபு கு என்பதாம்.

(வ - று.) ராமனுக்கு.

(e) ஐந்தன் உருபு இன், இல் என்பனவாம்.

(வ - று.) ராமனில், ராமனின்.

(f) ஆறன் உருபு அது, ஆது அ, உடைய என்பனவாம்.

(வ - று.) ராமனது, தனது, தன, ராமனுடைய.

(g) ஏழன் உருபு கண், இல் முதலியனவாம்.

(வ - று.) வீட்டின்கண், வீட்டில்.

(h) பெயரின் ஈறுதிரிதல் முதலிய விகாரங்களே எட்டாம் வேற்றுமையின் உருபாம்.

(வ - று.) தம்பீ, அண்ணா.

பெயர்ச்சொல்லிலக்கண முற்றிற்று.

## வினைச்சொல்லிலக்கணம்.

(39) வினைச்சொல்லாவன - வேற்றுமை யேற்காமல் காலத்தோடுதோன்றிப் பொருளின் புடைபெயர்ச்சியைத் தெரிவிப்பனவாம்.

(வ - று.) வந்தான், வருகிறான், வருவான்.

(40) அவை தெரிநிலைவினை, குறிப்புவினை என இரு வகைப்படும்.

### தெரிநிலைவினை.

(41) அவற்றுள், தெரிநிலைவினையாவது - காலமும், தொழிலும் வெளிப்படையாகத் தெரியநிற்பதாம்.

(வ - று.) வந்தான்.

(இதில் வருதலாகிய தொழிலும், இறந்தகாலமும் வெளிப்படையாகத் தெரியநிற்றல் காண்க.)

(42) அது தன்வினை, பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, செய்வினை, செயப்பாட்டுவினை என அறுவகையாம்.

அவற்றுள்,

(a) தன்வினையாவது - தன்மை, முன்னிலை, படர்க்கைக் கர்த்தாக்கள் தாமே செய்யும் வினையாம்.

(வ - று.) படித்தேன், படித்தாய், படித்தான்.

(b) பிறவினையாவது - அக்கர்த்தாக்கள் பிறராற் செய்விக்கும் வினையாம்.

(வ - று.) படிப்பித்தேன், படிப்பித்தாய், படிப்பித்தான்.

(c) செயப்படுபொருள் குன்றியவினையாவது - செயப்படுபொருள் இன்றி வரும் வினையாம்.

(வ - று.) நடந்தான்.

(d) செயப்படுபொருள் குன்றுவினையாவது - செயப்படு பொருளுடையதாய் வரும் வினையாம்.

(வ - று.) படித்தான்.

(யாரை, எதை, எவற்றை என்னுங் கேள்விக்கு விடையின்றேல், செயப்படுபொருள் குன்றியவினையெனவும், விடையிருப்பின் செயப்படுபொருள் குன்றுவினையெனவுங் கொள்க.)

(e) செய்வினையாவது - கர்த்தாவின் தொழிலை யுணர்த்தும் வினையாம். (இதனைத் தந்தொழி லென்பர்.)

(வ - று.) (நாகன் புலியைக்) கொன்றான்.

(இதிற் கொல்லுதல் கர்த்தாவின் தொழிலாதல் காண்க.)

(f) செயப்பாட்டுவினையாவது - கர்த்தாவின் தொழிலைத் தனக்கு விசேஷணமாகப் பெற்றுச் செயப்படுபொருளின் தொழிலை யுணர்த்தும் வினையாம்.

(இதனைத் தம்மினாகிய தொழிலென்பர்.)

(வ - று.) (நாகனாற்புலி) கொல்லப்பட்டது.

(இதிற் கர்த்தாவின்வினை கொல்லுதல்; அதனை விசேஷணமாகப் பெற்றவினை 'படுதல்'; அது செயப்படுபொருளின் றொழிலை யுணர்த்தும் வினையாதல் காண்க.)

(43) இவை உடன்பாட்டுவினையும், எதிர்மறை வினையும் என இருவகைப்படும் என்க.

இவற்றுள்,

(a) உடன்பாடாவது - தொழிலின் நிகழ்ச்சியை யுணர்த்துவதாம்.

(வ - று.) வந்தான்.

(b) எதிர்மறையாவது - தொழில் நிகழாமையை யுணர்த்துவதாம்.

(வ - று.) வரான்.

(44) இவை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவற்றான் மூவகையாம்.

(வ - று.) நடந்தான், நடக்கின்றான், நடப்பான்.

(உடன்பாட்டுவினை தனித்தனி மூன்றுகாலத்தையு முணர்த்தும் எனவும், எதிர்மறைவினை முக்காலத்திற்கும் பொதுவாம் எனவும் கொள்க. சில் எதிர்மறை வினைமுற்றுகள் நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கிலன் என முறையே மூன்றுகாலத்தையும் உணர்த்துதலும் உண்டு.)

(45) இங்ஙனம் வரும் இவ்வினைச்சொற்கள்: எச்சவினை, முற்றுவினை என இருவகையாம்.

(46) அவற்றுள், எச்சவினையாவது - திணைபாலிடங்கள் குறைந்து பொருள் முடிதற்கு மற்றொரு சொல்லை அவாவிநிற்கும் வினையாம்.

(47) அது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

அவற்றுள்,

(a) பெயரெச்சமாவது - பெயரைக்கொண்டு முடியும் எச்சவினையாம்.

(வ - று.) வந்த (மனிதன்).

(b) வினையெச்சமாவது - வினையைக்கொண்டு முடியும் எச்சவினையாம்.

(வ - று.) வந்து போனான்.

(48) வினைமுற்றாவது - திணைபாலிடங்கள் குறைதலின்றிப் பொருள் முற்றிநிற்கும் வினையாம்.

(வ - று.) கண்டான்.

(49) இவற்றுள், முற்றுவினை: தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, ஏவல்

வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என ஐந்து வகையாம்.

அவற்றுள்,

(a) தன்மை வினைமுற்றாவது - தன்மைக்கர்த்தாவின் தொழிலை யுணர்த்துவதாம். அது தன்மையொருமை, தன்மைப்பன்மை என இருவகைப்படும்.

(உ - று.) நடந்தேன் - தன்மையொருமை.
நடந்தோம் - தன்மைப்பன்மை.

(b) முன்னிலை வினைமுற்றாவது - முன்னிலைக்கர்த்தாவின் தொழிலை யுணர்த்துவதாம். அது முன்னிலையொருமை, முன்னிலைப்பன்மை என இருவகைப்படும்.

(உ - று.) நடந்தாய் - முன்னிலையொருமை.
நடந்தீர் - முன்னிலைப்பன்மை.

(c) படர்க்கை வினைமுற்றாவது - படர்க்கைக் கர்த்தாவின் தொழிலை யுணர்த்தும் வினைமுற்றாம். அது, படர்க்கை ஆண்பால், படர்க்கைப் பெண்பால், படர்க்கைப் பலர்பால், படர்க்கை யொன்றன்பால், படர்க்கைப் பலவின்பால் என ஐந்து வகைப்படும்.

(உ - று.) நடந்தான் - படர்க்கை ஆண்பால்.
நடந்தாள் - ,, பெண்பால்.
நடந்தார் - ,, பலர்பால்.
நடந்தது - ,, ஒன்றன்பால்.
நடந்தன - ,, பலவின்பால்.

(d) ஏவல் வினையாவது - முன்னிலையிடத்தானை இது செய் என ஏவும் வினையாம்.

(இங்கு ஏவலொருமைக்குச் சொன்னதைக்கொண்டு அதன் பன்மைக்கும் ஆமாறு உணர்ந்துகொள்க. இங்ஙனங் கொள்ளுதலை உபலக்ஷணமென்பர்.)

அஃது ஏவலொருமை, ஏவற்பன்மை என இருவகைப் படும்.

(வ - று.) நடவாய் - ஏவலொருமை.
நடமின் - ஏவற்பன்மை.

(இவற்றுள் ஏவலொருமை ஈறுகெட்டு நட என வருதலு முண்டு.)

(௭) வியங்கோளாவது - வாழ்த்தல், வைதல், வேண் டன் முதலிய பொருள்களை யுணர்த்தி இருதிணை ஐம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும் வினைமுற்றும்.

(வ - று.) வாழ்க, அழிக, வரவேண்டும்.
உண்ணல், வாழிய, வாழி.

## குறிப்புவினை.

(50) குறிப்புவினையாவது - பொருளாதியாறும் அடி யாகப்பிறந்து காலத்தைக் குறிப்பாகக்காட்டும் வினையாம்.

(வ - று.) பொன்னன்.

(இது நேற்றுப் பொன்னை யுடையவனு யிருந்தான் எனக் கொள்ளின் இறந்தகாலத்தையும், இன்று பொன்னையுடையவனு யிருக் கின்றான் எனக்கொள்ளின் நிகழ்காலத்தையும், நாளைப் பொன்னை யுடையவனு யிருப்பான் எனக்கொள்ளின் எதிர்காலத்தையும், சொ ல்லுவான் குறிப்பா லுணர்த்திநிற்கும்.)

(51) இது செயப்படுபொருள் குன்றியவினை குன்றா வினை என இருவகைப்படும்.

(வ - று.) பொன்னன் - உடையான்.

(52) இங்ஙனம்வரும் இதுவும் எச்சவினையும், முற்று வினையும் என இருவகைப்படும்.

(53) இக் குறிப்பெச்சமும்: பெயரெச்சம், வினையெச் சம் என இருவகைப்படும்.

(வ - று.) கரிய - (பெயரெச்சம்.)
மெல்ல - (வினையெச்சம்.)

(54) குறிப்பு வினைமுற்று: தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று என மூவகையாம்.

(வ - று.) குழையினேன் - (தன்மை.)
குழையினாய் - (முன்னிலை.)
குழையினான் - (படர்க்கை.)

(55) இக் குறிப்புவினையிலும் உடன்பாடு, எதிர்மறை என்னும் இருவகையுண்டு.

(வ - று.) கரிய, மெல்ல, உடையான் } உடன்பாடு.
இல்லாத, இன்றி, இல்லாதான் } எதிர்மறை.

வினைச்சொல்லிலக்கண முற்றிற்று.

## இடைச்சொல்லிலக்கணம்.

(56) இடைச்சொல்லாவன - பெயருமாகாமல் வினையுமாகாமல் அவற்றின் வேறுமாகாமல் இடை நிகர்த்தனவாய் அப்பெயர்வினைகளைப்போல் தனித்து நடத்தலின்றி அவற்றின் முன்னாகவேனும் பின்னாகவேனும் அவற்றைச் சார்ந்து நின்றும், அவற்றிற்குறுப்பாகியும் வருவனவாம்.

(வ-று.) மற்றொன்று - மற்று - பெயரின்முன் வந்தது.
மணியை - ஐ - பெயரின்பின் வந்தது.
ஓ தந்தார் - ஓ - வினையின்முன் வந்தது.
வருகதில் - தில் - வினையின்பின் வந்தது.

} இவற்றுள் இடைச் சொல்பெயர்வினைகளை முன்பின் சார்ந்து நின்றன.

குழையினன் - இன், அன் - பெயரின் உறுப்பாய் வந்தன.
உண்ணாய் - ஆய் - வினையின் உறுப்பாய் வந்தது.

(57) இங்ஙனம் இச்சொற்கள் பெயர்வினைகளோடு வருங்கால் ஒன்றேனும், பலவேனும் வரும்.

(வ - று.) மற்றொன்று - மற்று - முன்னே ஒன்றுவந்தது.
ஏஏ, இவன் - ஏஏ - முன்னே பலவந்தன.
மணியால் - ஆல் - பின்னே ஒன்றுவந்தது.
மரத்தால் - அத்து, ஆல் - பின்னே பலவந்தன.

கூனி - இ - பெயரின் உறுப்பாய் ஒன்றுவந்தது.

கேளாய் - ஆய் - வினையின் உறுப்பாய் ஒன்றுவந்தது.

நிலத்தினன் - அத்து, இன், அன் - பெயரின் உறுப்பாய்ப் பல வந்தன.

உண்டனன்-ட், அன், அன் - வினையின் உறுப்பாய்ப் பலவந்தன.

(58) இவை வேற்றுமை யுருபுகளும், வினையுருபுகளும், சாரியைகளும், உவமையுருபுகளும், தத்தம்பொருளையுடையனவும், இசைநிறைப்பனவும், அசைநிலையாவனவும், குறிப்பின்வருவனவும் என எட்டு வகைப்படும்.

(*a*) வேற்றுமையுருபுகளாவன-ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னுமிவை முதலியன.

(*b*) வினையுருபுகளாவன - பகுபத உறுப்புகளாகிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறனுள், பகுதியொழிந்த மற்ற ஐந்துமாம்.

## தெரிநிலைவினை.

**படித்தனன்** என்பது படி + த் + த் + அன் + அன் எனப் பிரிக்கப்படும். இதில்: படி - பகுதி, முன்னிருக்கும் த் - சந்தி, பின்னிருக்கும் த் - இடைநிலை, முன்னிருக்கும் அன் - சாரியை, பின்னிருக்கும் அன் - விகுதி.

**தருவான்** என்பது தா + ரு + வ் + ஆன் எனப் பிரிக்கப்படும். இதில்: தா - பகுதி, தா - என்பது த - எனக் குறுகியது குறுக்கல்

விகாரம், ரு - விரித்தல் விகாரம், வ் - இடைநிலை, ஆன் - விகுதி. இவ் வுறுப்புகளிற் பகுதியொழிந்த மற்றவைகளை இடைச்சொற்களெனக் கொள்க.

சில சொற்களிற் பகுதியுங்கூட இடைச்சொல்லா யிருத்தல் உண்டு.

(வ - று.) போன்றான். இது போல் + ற் + ஆன் எனப் பிரிக்கப்படும். இதில் போல் என்னும் பகுதி உவம உருபு, ஆதலின் இடைச்சொல்லெனப்படும். இவை தெரிநிலை.

## குறிப்புவினை.

**வலைஞன்** என்பதில் வலை - பகுதி, ஞ் - இடைநிலை, அன் - விகுதி. இவற்றுள்ளும் பகுதி யொழிந்தன இடைச்சொல் எனக் கொள்க.

**அவன்** என்பதில் அ - பகுதி, வ் - சந்தி, அன் - விகுதி. இதிற் பகுதியுங்கூட இடைச்சொல்லாதல் காண்க.

(குறிப்புவினைக்கும், பெயர்ப்பகுபதத்திற்கும் உறுப்பில் வித்தியாச மில்லாமையால், பெயர்ப்பகுபதத்தின் உறுப்புகள் வேறாகக் கூறப்பட்டில.)

(*c*) **சாரியைகளாவன**-அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன என்பனவும் இவைபோல்வன பிறவுமாம்.

(*d*) **உவமையுருபுகளாவன** - போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, நேர, நிகர, இயைய, ஏய்ப்ப, அன்ன, இன்ன என்பனவும் இவைபோல்வன பிறவுமாம்.

(*e*) **தத்தம் பொருளைத்தரும் இடைச்சொற்களாவன** - ஏ, ஓ, ஆ, உம், என, என்று, ஒடு, கொல், மன், மற்று, தில், அம்ம என்பனவும் பிறவுமாம்.

(*f*) **இசைநிறைக்கவரும் இடைச்சொற்களாவன** - ஏ, ஒடு, தெய்ய என்பவும் பிறவுமாம்.

(*g*) அசைநிலை இடைச்சொற்களாவன - யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்பனவும் பிறவுமாம்.

(*h*) குறிப்புப்பொருளில்வரும் இடைச்சொற்களாவன - கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென, கடகடென, களகளென, திடுதிடென, நெறுநெறென, படபடென, துண்ணென, துணுக்கென, திடுக்கென, பொள்ளென, பொருக்கென, ஞெரேலென, அந்தோ, அன்னோ, ஐயோ, சீ, சீசீ, சிச்சீ, சை, ஆஅ, ஓஒ, ஆஆ, ஓஓ, அம்மா என்பவும் பிறவுமாம்.

இடைச்சொல்லிலக்கண முற்றிற்று.

## உரிச்சொல்லிலக்கணம்.

(59) உரிச்சொல்லாவன - பெயர்வினைகளைவிட்டு நீங்காமல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியனவாய்ப் பொருளை யுணர்த்துங்கால் ஒருசொல் பலபொருளையும், பலசொல் ஒரு பொருளையும் உணர்த்திச் செய்யுள் வழக்கின்மாத்திரம் வருவனவாம்.

(*a*) அவற்றுள் இசை என்பது, ஓசை. அது செவியாலுணரப்படுவது.

(வ - று.) கலி (கடல்).

(*b*) குறிப்பென்பது, மனத்தா லுணரப்படுவது.

(வ - று.) நனி (தின்றான்).

கடி (மலர்).

(*c*) ஈண்டுப் பண்பென்றது, செவியொழிந்த மற்றைய நாற்பொறிகளால் உணரப்படுவனவற்றை.

(வ - று.) குரு (மணி).

(குரு - நிறம்.)

(இது கண்ணால் உணரப்படுவது. மற்றப்பொறிகளா லுணரப்படும் பண்புகளுக் குதாரணம் வந்துழிக் காண்க.)

(மெய், நா, கண், மூக்கு என்னும் இந்நான்கு பொறிகளுக்கும், செவியாகிய பொறிக்கும் வேறுபாடு உண்மையின் செவியினால் உணரப்படும் ஓசை வேறு பிரித்துரைக்கப்பட்டது.)

(இவற்றைக் குணப்பண்பு, தொழிற்பண்பு என இரண்டுவகையின் அடக்கியுங் கூறுவர்.)

(60) ஒருசொல் பலபொருளை யுணர்த்து முரிச்சொல்.

(வ - று.) கடி.

(இது காப்பு, கூர்மை, அச்சமுதலிய பலபொருளைத் தருவதாகும்.)

(61) பலசொல் ஒருபொருளுணர்த்தும் உரிச்சொல்.

(வ - று.) சால், உறு, தவ, நனி, கூர், கழி.

(இவை மிகுதி என்னும் ஒருபொருளைத் தரும் உரிச்சொற்கள்.)

உரிச்சொல்லுக்கும், பண்புப்பெயருக்கும் உள்ள வேறுபாடு.

(62) பெயர்த்தன்மையினீங்கி இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருளுக்குரிமைபூண்டு செய்யுள் வழக்கின்மாத்திரம் வருவது உரிச்சொல் எனவும், பெயர்த்தன்மையை யடைந்து வேற்றுமையுருபேற்று உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்கினும் வருவது பண்புப் பெயர் எனவும் அறிக.

உரிச்சொல்லிலக்கண முற்றிற்று.

---

சொல்லிலக்கண முற்றிற்று.

ஸ்ரீ

# வாக்கிய இலக்கணம்.

(63) இச்சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்துநின்ருல் சொற்றேடர் எனவும், தொடர்மொழி எனவும், துணைமொழி எனவும் பெயர்பெறும்.

(64) இரண்டுசொல் தொடர்ந்துநின்ருல் இருமொழித்தொடர் எனவும், இரண்டின் மிக்க சொற்கள் தொடர்ந்துநின்ருல் பன்மொழித்தொடர் எனவும் பெயர்பெறும்.

(ஒன்றின் மிக்கவற்றைப் பலவென்றல் தமிழ்வழக்கு; இரண்டின் மிக்கவற்றைப் பலவென்றல் வடமொழி வழக்கு.)

(65) இச்சொற்றொடர் பொருள் முடியாமல் நிற்குமானல் எச்சச்சொற்றேடர் எனவும், பொருள்முடிந்து நிற்குமானல் முற்றுச்சொற்றேடர் எனவும் பெயர்பெறும்.

(வ - று.) இராமனும், கிருஷ்ணனும்.
இராமன் வந்தான்.

இவற்றுள்,

(66) முற்றுச்சொற்றொடர்: வாக்கியம் எனப்படும்.

(67) வாக்கியமாவது - எழுவாய், பயனிலை என்னும் இரண்டு முக்கிய உறுப்புகளை யுடையதாம்.

(வ - று.) பொன்னன் வந்தான்.

(இதில்: பொன்னன் - எழுவாய், வந்தான் - பயனிலை.)

(68) சில வாக்கியங்களிற் செயப்படுபொருள் என்னும் மற்றேருறுப்பு இருத்தலுமுண்டு.

(வ - று.) பொன்னன் புஸ்தகத்தை வாங்கினன்.

(இதில் புஸ்தகத்தை என்பது செயப்படுபொருளாதல் காண்க.)

(69) தமிழில் வாக்கியங்கள் பயனிலையை நோக்கிப் பெயர்ப்பயனிலைவாக்கியம் எனவும், வினைப்பயனிலைவாக்கியம் எனவும் இருவகைப்படும்.

இவற்றுள்,

(a) பெயர்ப்பயனிலை வாக்கியமாவது - பெயர்ச்சொல்லே பயனிலையாக வரப்பெறுவதாம்.

(வ - று.) இவன் இராமன்.

(b) வினைப்பயனிலை வாக்கியமாவது - வினைச்சொல்லே பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) இராமன் வந்தான்.

(70) இவ்வினைப்பயனிலைவாக்கியம்: தெரிநிலைவினைப் பயனிலைவாக்கியம் எனவும், குறிப்புவினைப்பயனிலைவாக்கியம் எனவும் இருவகையாம்.

அவற்றுள்,

(a) தெரிநிலைவினைப்பயனிலை வாக்கியமாவது - தெரிநிலைவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) பொன்னன் நடந்தான்.

(b) குறிப்புவினைப்பயனிலை வாக்கியமாவது - குறிப்புவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) இவன் (இப்போது) பொன்னன்.

(71) இவற்றுள், தெரிநிலைவினைப்பயனிலை வாக்கியம்: செய்வினைவாக்கியம் எனவும், செயப்பாட்டுவினை வாக்கியம் எனவும் இருவகையாம்.

அவற்றுள்,

(a) செய்வினை வாக்கியமாவது - செய்பவனது (கர்த்தாவின்) வினையைப் பயனிலையாகப் பெற்றுவருவது. அது செயப்படுபொருள் குன்றியவினைப்பயனிலை வாக்கியம், செயப்படுபொருள் குன்றாவினைப்பயனிலைவாக்கியம் என இருவகையாம்.

(1) செயப்படுபொருள் குன்றியவினைப்பயனிலை வாக்கியமாவது - செயப்படுபொருள் இல்லாதவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) இளையாள் வந்தாள்.

(2) செயப்படுபொருள் குன்றாவினைப்பயனிலை வாக்கியமாவது - செயப்படுபொருள் இருக்கின்றவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) ராமன் வில்லை வளைத்தான்.

(b) செயப்பாட்டுவினை வாக்கியமாவது - செயப்படுபொருளின் வினையைப் பயனிலையாகப்பெற்று வரப்பெறுவது.

(வ - று.) ராமனால் வில் வளைக்கப்பட்டது.

(இதில் ராமன்-கர்த்தா, வில் - செயப்படுபொருள், வளைத்தல் - கர்த்தாவின்தொழில், படுதல் - செயப்படுபொருளின் தொழில்; இவற்றுள், செயப்படுபொருளின் வினையாகிய பட்டது என்பது பயனிலையாதல் காண்க.

'பட்டது' என்பது 'வளைக்க' என்பதோடு கூடிப் பயனிலையாயிருக்கின்றதேயன்றித் தனித்துப் பயனிலையாகவில்லை; அங்ஙனமிருக்க, 'வளைக்கப்பட்டது' என்பதைப் பயனிலை என்னாது 'பட்டது' பயனிலை என்றது என்னெனின், 'பட்டது' என்றால் என்னபட்டது என்பார்க்கு இன்னது பட்டது எனவேண்டுமாத

லின் 'வளைக்க' என்பது விசேஷணமாக நிற்க அவ்விசேஷணத்தை யடுத்த 'பட்டது' என்பதே பயனிலையாயிற்று என்க. அன்றியும் 'வளைக்க' என்பது செய்பவனது (கர்த்தாவினது) தொழிலாதலாலும் 'பட்டது' என்பதே செயப்படுபொருளின் தொழிலாதலாலும், செயப்பாட்டுவினைக்குச் செயப்படுபொருளின் வினையே பயனிலையாக வரும் என முன்னமே கூறியிருக்கின்றபடியினாலும் 'பட்டது' என்பதே பயனிலை என்க.)

(72) செய்வினைவாக்கியத்துக்கும், செயப்பாட்டுவினை வாக்கியத்துக்கும் உள்ள வித்தியாசம்:—

(*a*) (செய்வினைவாக்கியத்தில் கர்த்தா முதல்வேற்றுமையிலிருக்கும்; செயப்பாட்டுவினைவாக்கியத்தில் கர்த்தா மூன்றாம் வேற்றுமையிலிருக்கும்.

(*b*) செய்வினைவாக்கியத்தில் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையிலிருக்கும்; செயப்பாட்டுவினைவாக்கியத்தில் செயப்படுபொருள் முதல்வேற்றுமையிலிருக்கும்.

(*c*) செய்வினைவாக்கியத்தில் பயனிலைவினை (கர்த்தாவின் வினையாதலின்) கர்த்தாவின் விகுதியைக்கொண்டு முடியும்; செயப்பாட்டுவினைவாக்கியத்தில் பயனிலைவினை (செயப்படுபொருளின் வினையாதலின்) செயப்படுபொருளின் விகுதியைக்கொண்டு முடியும் என அறிக.

இதனானே, செய்வினைவாக்கியத்தில் கர்த்தா எழுவாயாம் எனவும், செயப்பாட்டுவினைவாக்கியத்தில் செயப்படுபொருள் எழுவாயாம் எனவும் அறிக. எங்கும் எழுவாய் முதல்வேற்றுமையாகவே யிருத்தல் வேண்டும்; அவ்வேற்றுமைக்கே எழுவாய் வேற்றுமை என்னும் பெயருண்டென்பதை யறிக. இவற்றாற் செயப்பாட்டுவினை வாக்கியத்திற் செயப்படுபொருளே எழுவாயாக நிற்றலின் அதற்கு எழுவாய் பயனிலையென்னும் இரண்டுறுப்புகளே யுண்டென்பதையும் உய்த்துணர்க.)

(73) இவ்விருவகை வாக்கியங்களில் ஒவ்வொன்றும் தன்வினைப்பயனிலை வாக்கியம், பிறவினைப்பயனிலை வாக்கியம் என இருவகையாம்.

(a) தன்வினையாவது - தன்மைக் கர்த்தாவாயினும், முன்னிலைக் கர்த்தாவாயினும், படர்க்கைக் கர்த்தாவாயினும் தானே செய்யும் வினையாம்; இத்தன்வினை: பயனிலையாக வரப்பெறும் வாக்கியம் தன்வினைப்பயனிலை வாக்கியமாம்.

(வ - று.)

| | |
|---|---|
| நான் வந்தேன்.<br>நாம் வந்தோம்.<br>நீ வந்தாய்.<br>நீர் வந்தீர்.<br>அவன் வந்தான்.<br>அவள் வந்தாள்.<br>அவர் வந்தார்.<br>அது வந்தது.<br>அவை வந்தன. | செய்வினைத் தன்வினை. |
| நான் காணப்பட்டேன்<br>நாம் காணப்பட்டோம்<br>நீ காணப்பட்டாய்.<br>நீர் காணப்பட்டீர்.<br>அவன் காணப்பட்டான்.<br>அவள் காணப்பட்டாள்.<br>அவர் காணப்பட்டார்.<br>அது காணப்பட்டது.<br>அவை காணப்பட்டன. | செயப்பாட்டு வினைத் தன்வினை. |

(முன்னுரைக்கப்பட்டன யாவும் தன்வினைப்பயனிலை வாக்கியங்களேயாம்.)

(*b*) பிறவினையாவது - அம்மூவகைக் கர்த்தாக்களும் பிறனொருவனைச் செய்விக்கும் வினையாம். இப்பிறவினை பயனிலையாக வரப்பெறும் வாக்கியம் பிறவினைப்பயனிலை வாக்கியமாம்.

(வ - று.)

| | | | |
|---|---|---|---|
| நான் | (இராமனை) | வருவித்தேன். | செய்வினைப் பிறவினை. |
| நாம் | ,, | வருவித்தோம். | |
| நீ | ,, | வருவித்தாய். | |
| நீர் | ,, | வருவித்தீர். | |
| அவன் | ,, | வருவித்தான். | |
| அவள் | ,, | வருவித்தாள். | |
| அவர் | ,, | வருவித்தார். | |
| அது | ,, | வருவித்தது. | |
| அவை | ,, | வருவித்தன. | |

| | | | |
|---|---|---|---|
| நான் | (இராமனைக்) | காணப்படுவித்தேன். | செயப்பாட்டு வினைப் பிறவினை. |
| நாம் | ,, | காணப்படுவித்தோம். | |
| நீ | ,, | காணப்படுவித்தாய். | |
| நீர் | ,, | காணப்படுவித்தீர். | |
| அவன் | ,, | காணப்படுவித்தான். | |
| அவள் | ,, | காணப்படுவித்தாள். | |
| அவர் | ,, | காணப்படுவித்தார். | |
| அது | ,, | காணப்படுவித்தது. | |
| அவை | ,, | காணப்படுவித்தன. | |

(74) செய்வினை வாக்கியத்திலுள்ள செயப்படுபொருள் குன்றியதன்வினை பிறவினையாகுங்கால் செயப்படுபொருள்குன்றுவினையாம்.

(வ - று.) நான் வந்தேன் - தன்வினை.

நான் (ராமனை) வருவித்தேன் - பிறவினை.

(75) செயப்படுபொருள் குன்றாத்தன்வினை பிறவினையாகுங்கால் செயப்படுபொருளிரண்டுடைச் செயப்படுபொருள் குன்றாவினையாம்.

(வ - று.) அரசன் அரண்மனையை அடைந்தான் - தன்வினை.
அரசன் திருடரைச் சிறைச்சாலையையடைவித்தான்- பிறவினை.

(76) இனிச் செயப்படுபொருள்குன்றாச் செய்வினை வாக்கியம் : செயப்படுபொருள் ஒன்றுடைச் செய்பொருள் குன்றாச் செய்வினைவாக்கியம் எனவும், செயப்படுபொருளிரண்டுடைச் செய்பொருள்குன்றாச் செய்வினைவாக்கியம் எனவும் இருவகைப்படும்.

(a) செயப்படுபொருள் ஒன்றுடைச் செய்பொருள்குன்றாச் செய்வினைவாக்கியமாவது - செயப்படுபொருள்குன்றாச் செய்வினைத்தன்வினையும், செயப்படுபொருள் குன்றிய செய்வினைத்தன்வினை திரிந்துவந்த செய்வினைப் பிறவினையும் பயனிலையாக வரப்பெறும் வாக்கியமாம்.

(வ - று.) மாதவன் மணியை அடித்தான்.
வைத்தியர் பொன்னனை நடப்பித்தார்.

(b) செயப்படுபொருளிரண்டுடைச் செய்பொருள்குன்றாச் செய்வினைவாக்கியமாவது - செயப்படுபொருள்குன்றாச் செய்வினைத்தன்வினை திரிந்துவந்த செய்வினைப்பிறவினை பயனிலையாக வரப்பெறும் வாக்கியமாம்.

(வ - று.) அரசன் பகைவரைக் காட்டை யடைவித்தான்.
(செய்பொருள், செயப்படுபொருளென்பன ஒருபொருளன.)

(வ - று.) குறிப்பு : 'விஸ்வாமித்திரர் இராமனையும் இலக்ஷ்மணனையும் வாழ்த்தினார்' என்பதிற் பயனிலையாகிய 'வாழ்த்தினார்' என்பது இரண்டு செயப்படுபொருளைக் கொண்டதன்றோ எனின்,

இதில் ஐயுருபு வேறுபல பெயர்களையடக்கி ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டதல்லது 'வாழ்த்தினார்' என்னும் வினை இரண்டுசெயப்படு பொருளைக் கொண்டதன்றென்க.

கொண்டதெனின் 'விஸ்வாமித்திரர் இராமனை வாழ்த்தினார்' என ஒரு செயப்படுபொருளைக்கொண்டு முடிதல் கூடாமை யறிக.

அன்றியும், 'வாழ்த்துவித்தார்' என்பது இரண்டு செயப்படு பொருளை வேண்டியே நிற்றலையும் உய்த்துணர்க.

(77) இனிச் செயப்பாட்டுவினைப்பயனிலை வாக்கியத்திலுள்ள தன்வினை பிறவினையாங்கால் செயப்படுபொருளிரண்டுடைச் செயப்பாட்டு வினையாம்.

(வ - று.) கண்ணனால் தீயர் கொல்லப்பட்டார் - தன்வினை.
கண்ணனால் தீயர் வானை யடைவிக்கப்பட்டார் - பிறவினை.

(செயப்பாட்டுவினைவாக்கியத்திற் செயப்படுபொருள் குன்றிய வினை வருவதன்றாதலால் அதிற் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்னும் வழக்கு இல்லை என்க.)

(78) இனிச் செயப்பாட்டுவினைப்பயனிலை வாக்கியம்: செயப்படுபொருள் ஒன்றுடைச் செயப்பாட்டுவினைப்பயனிலை வாக்கியம், செயப்படுபொருளிரண்டுடைச் செயப்பாட்டுவினைப்பயனிலை வாக்கியம் என இருவகையாம்.

(*a*) செயப்படுபொருள் ஒன்றுடைச் செயப்பாட்டுவினைப் பயனிலை வாக்கியமாவது :—செயப்படுபொருள் ஒன்றைக் காட்டும் செயப்பாட்டுவினைத்தன்வினை பயனிலையாக வரப் பெறுவது.

(வ - று.) அரசனாற் பகைவர் கொல்லப்பட்டார்.

(*b*) செயப்படுபொருளிரண்டுடைச் செயப்பாட்டுவினைப் பயனிலை வாக்கியமாவது :—செயப்படுபொருள் ஒன்

றைக் காட்டும் செயப்பாட்டுவினைத்தன்வினையின் விசேஷணந் திரிந்து செயப்படுபொருளிரண்டைக் காட்டவரும் செயப்பாட்டுவினைப்பிறவினை பயனிலையாக வரப்பெறும் வாக்கியமாம்.

(வ - று.) அரசனால் பகைவர் காட்டை அடைவிக்கப்பட்டனர்.

(79) குறிப்புவினைப்பயனிலை வாக்கியம்: செயப்படுபொருள்குன்றிய குறிப்புவினைப்பயனிலை வாக்கியம் எனவும், செயப்படுபொருள்குன்றாக் குறிப்புவினைப்பயனிலை வாக்கியம் எனவும் இருவகைப்படும்.

அவற்றுள்,

(*a*) செயப்படுபொருள்குன்றிய குறிப்புவினைப்பயனிலை வாக்கியமாவது: செயப்படுபொருளில்லாத குறிப்புவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) இவன் (நேற்றுக்) குழையன்.

(*b*) செயப்படுபொருள்குன்றாக் குறிப்புவினைப்பயனிலை வாக்கியமாவது: செயப்படுபொருளுள்ள குறிப்புவினை பயனிலையாக வரப்பெறுவது.

(வ - று.) அவன் பொன்னையுடையான்.

(80) பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக்கொண்டு முடிதலுமுண்டு.

(வ - று.) ராமனும் லக்ஷ்மணனும் அநுமானைக் கண்டார்கள்.

(81) ஒரு எழுவாய்க்குப் பல வினைப்பயனிலைகள் வருதலும் உண்டு. அங்ஙனம் வருங்கால் ஈற்றிலுள்ள பயனிலையொன்றும் வினைமுற்றாகவும், அதற்கு முன்னுள்ள மற்றப் பயனிலைகள் யாவும் வினையெச்சங்களாகவும் இருக்கும்.

(வ - று.) ராமன் தன்னைவிட்டுப் பிரியாத லக்ஷ்மணனுடன் கௌசிக முனிபுங்கவர்பின் அவரது ஆச்சிரமத்துக்குச் சென்று, (அங்கு யாகத்தை அழிக்கவந்த அரக்கர்களிற்) சுபாகுவைக் கொன்று, மாரீசனைக்கடலில் வீழ்த்தித், தாடகையை அழித்துப், பின் மிதிலைக்குச் சென்று, வில்லை வளைத்துச், சீதையை மணந்தனன்.

(82) சில வாக்கியங்களில் ஒரு எழுவாய்க்குப் பல வினைமுற்றுகள் பயனிலையாக வருதலும் உண்டு. அங்ஙனம் வருங்கால் ஈற்றிலுள்ள ஒரு வினைமுற்றைவிட்டு அதற்கு முன்னுள்ள மற்ற வினைமுற்றுகளையெல்லாம் வினையெச்சமாக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(வ - று.) 'கண்ணன் வீட்டினுள் நுழைந்தான், வெண்ணெயையெடுத்துக்கொண்டான், ஓடினான்' என வருமானால், அதைக் 'கண்ணன் வீட்டினுள் நுழைந்து, வெண்ணெயையெடுத்துக்கொண்டு ஓடினான்' எனக் கொள்ளுதல்வேண்டும்.

(83) பெயரெச்சம் ஒரு கர்த்தாவின் பயனிலையாக வரினும் அது தனது கர்த்தாவோடு கூடி ஒருவாக்கியத்திலுள்ள எழுவாய்க்கும், செயப்படுபொருளுக்கும் அடையாக நிற்பதல்லது, வினையெச்சம்போல ஒரு வாக்கியத்திற் பயனிலை யாதலில்லை.

(வ - று.) (a) ராமன் பிறந்ததினம் இது.

(இதில் தினம் என்பது எழுவாய்; இது என்பது பயனிலை. இவற்றுள் தினம் என்னும் எழுவாய்க்குப் பிறந்த என்னும் பெயரெச்சம் தனது கர்த்தாவாகிய ராமன் என்னுஞ் சொல்லோடுகூடி அடையாய்நின்றமை யறிக.)

(b) ராமன் பரசுராமன் கொடுத்த வில்லையும் வளைத்தான்

(இதில் ராமன் - எழுவாய், வளைத்தான் - பயனிலை, வில்லை - செயப்படுபொருள். இவற்றுள், வில்லை என்னுஞ் செயப்படுபொருளுக்குக் கொடுத்த என்னும் பெயரெச்சம் தனது கர்த்தாவாகிய பரசுராமன் என்பதனோடுகூடி அடையாய் நின்றமையறிக.)

(84) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் அடையடுத்து வருதலும் உண்டு.

(வ - று.) (a) கரியமேகம் வானத்திற் பரவியது.

(இதில் மேகம் என்னும் எழுவாய் கரிய என்னும் அடையடுத்து வந்தது.)

(b) கண்ணன் யசோதைக்குப் பயந்து வேகமாய் ஓடினான்.

(இதில் ஓடினான் என்னும் பயனிலை வேகமாய் என்னும் அடையடுத்து வந்தது.)

(c) கண்ணன் கொடியவளாகிய பூதனையைக் கொன்றான்.

(இதிற் பூதனை என்னுஞ் செயப்படுபொருள் கொடியவளாகிய என்னும் அடையடுத்து வந்தது.)

(d) மிக்க தைரியசாலியான அநுமார் அளவிடற்கரிய கருங்கடலைத் தாண்டி லங்கைக்கு வேகமாகச் சென்றார்.

(இதில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னுமூன்றும் அடையடுத்துவந்தமையறிக.)

(85) இனி, இவ்வாக்கியங்கள் தனிநிலைவாக்கியம், தொடர்நிலைவாக்கியம், கலப்புவாக்கியம் என மூவகையாம்.

அவற்றுள்,

(a) தனிநிலைவாக்கியமாவது - ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக்கொண்டு முடியப்பெறும் வாக்கியமாம்.

(வ - று.) தாடகை வந்தாள்.
ராமர் அவளைக் கொன்றார்.

(b) தொடர்நிலைவாக்கியமாவது - பல தனிநிலைவாக்கியங்கள் ஒன்றாகச் சேர்ந்தாகிலும், பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டாகிலும், ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டாகிலும் முடியப்பெறும் வாக்கியமாம்.

(வ - று.) 1. மின்னல் மின்னியது, ஆனால் மழை பெய்யவில்லை.
2. இராமனும் லக்ஷ்மணனும் அநுமாரைக் கண்டனர்.
3. அநுமார் கடலைத்தாண்டி, லங்கைக்குச்சென்று, சீதையைக்கண்டு, கணையாழியைக் கொடுத்தார்.

(c) கலப்புவாக்கியமாவது - ஒரு முதனிலைவாக்கியத்தோடு துணைநிலைவாக்கியம் ஒன்றேனும் பலவேனும் என்று, என என்னுஞ் சொற்களில் ஒன்றால் இணைக்கப்பட்டு வரப்பெறுவதாம்.

(வ - று.) (1) சீதாப்பிராட்டியார் ஸ்ரீ ரகுநாதரை நோக்கி "நாத! இந்த அழகியமானைப் பிடித்துத் தருக" எனக்கூறினார்.
(2) சுக்கிரீவன் அநுமாரை நோக்கி: "ஐய! சீதாப்பிராட்டியார் இருக்கும் இடத்தைக் கண்டறிந் துரைக்கவல்லீர் நீரே. மற்றவர்களால் அஃது ஆகுங்காரியமன்று. மங்களமாகச் சென்று வருவீராக" என்று கூறினான்.

(86) சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்றலும் உண்டு.

(வ - று.) கிருஷ்ணா! இனி வெண்ணெய்த்தாழியை உடைக்காதே.

(இதில் 'நீ' என்னும் எழுவாய் மறைந்துநின்றமையறிக. இதனைத் தோன்றா எழுவாய் என்பர்.)

(87) சில வாக்கியங்களில் பயனிலை மறைந்துநிற்றலும் உண்டு.

(வ - று.) அவன் ஈகையில் கர்ணன்.

(இதிற் 'போன்றவன்' என்னும் பயனிலை மறைந்துநின்றமை யறிக.)

(88) சில வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்து நிற்றலும் உண்டு.

(வ - று.) உங்கள் மாணவன் நேற்றுப் படித்தான்.

(இதிற் 'பாடத்தை' என்னுஞ் செயப்படுபொருள் மறைந்து நின்றது.)

(89) கலப்புவாக்கியங்களி னிடையேவரும் துணைநிலைவாக்கியம்: நேர்நிலையுண்மொழி, நேர்நிலையின்மொழி என இருவகையாம்.

(ஈண்டு 'மொழி' என்பது காரணவாகுபெயராய் வாக்கியத்தை யுணர்த்திற்றென்க.)

அவற்றுள்,

(*a*) நேர்நிலையுண்மொழியாவது - ஒருவன் மற்றொருவன் கூறிய வாக்கியத்தைக் கூறுங்கால் அவ்வாக்கியத்தை அவன் கூற்றாகவே வைத்துக் கூறுவதாம்.

(வ - று.) பொன்னன் கிருஷ்ணனை நோக்கி "நான் நாளைய தினம் உங்கள் வீட்டுக்கு வருகின்றேன்" என்று சொன்னான் என்றான்.

(இதில் வந்த துணைநிலைவாக்கியமாகிய பொன்னன் கூறியவாக்கியத்தைப் பொன்னன் கூற்றாகவே வைத்துக் கூறினமை காண்க.)

(b) நேர்நிலையின்மொழியாவது :— ஒருவன் மற்ெருருவன் கூறிய வாக்கியத்தைக் கூறுங்கால் அதை அவன் கூற்ருக வைத்துக் கூருமல், தன் கூற்ருற் கூறுதல்.

(உ - ம்.) பொன்னன் தன் தம்பியைநோக்கித் "தம்பீ! ராமன் நாளையதினம் நமது வீட்டுக்கு வருவதாகச் சொன்ஞன்" என்ருன்.

(90) சில வாக்கியங்களில் செயப்படுபொருள், கருவி, நிலம், செயல், காலம் என்னும் இவைகள் எழுவாய்போல வைத்துக் கூறப்படுதலும் உண்டு.

(உ - ம்.) இந்த மாடு யான்கொண்டது - செயப்படுபொருள்.
இந்த எழுத்தாணி யான் எழுதியது - கருவி.
இந்த வீடு யான் இருந்தது - நிலம்.
இந்தத் திருத்தம் யான் செய்தது - செயல்.
இந்த நாள் யான் பிறந்தது - காலம்.

(91) சிலவாக்கியங்களில் ஏவுதற்கர்த்தாவை இயற்றுதற்கர்த்தாவைப்போல வைத்துக் கூறுதலும் உண்டு.

(உ - ம்.) அரசன் ஆலயங்கட்டினுன்.

(92) வாக்கியத்தில் எழுவாயோடு பயனிலை : திணை, பால், இடம், எண் இவற்ருல் வழுவிவருதல் குற்றமாம். வழுவுதல் - தவறுதல்.

(உ - ம்.) அது வந்தான் - திணைவழு.
அவள் வந்தான் - பால்வழு.
யான் வந்தான் - இடவழு.
நாம் வந்தேன் - எண்வழு.

(93) காலம் வழுவிவருதலுங் குற்றமாம்.

(உ - ம்.) நேற்று வருவான்.

(94) இனி இவைகள் வழுவாமல் வருமாறு:—

அது வந்தது, அவள் வந்தாள், யான் வந்தேன் } நாம் வந்தோம். நேற்று வந்தான்.

(95) மரபு வழுவிவருவதுங் குற்றமாம்.

(மரபாவது - எந்தப்பொருளை எந்தச்சொல்லால் முன்னோர்கள் சொல்லிவைத்தார்களோ அந்தப்பொருளை அந்தச்சொல்லாலேயே சொல்லுவதாம்.)

(ஆடுமேய்ப்பானைப் பாகன் எனல் மரபுவழுவாம். யானைக்காரனை அப்படிச் சொல்லுதல் மரபாம். இப்படியே மற்றவைகளையுங் கொள்க.)

(96) தன்மையோடு முன்னிலையையாயினும், படர்க்கையையாயினும், அவ்விரண்டையும் ஆயினுங் கூட்டி முடிக்குங்கால் தன்மைப்பன்மைவினைமுற்றால் முடிக்க.

(வ - று.) நானும் நீயும் போனோம்.
நானும் அவனும் போனோம்.
நானும் நீயும் அவனும் போனோம்.

(97) முன்னிலையோடு படர்க்கையைச் சேர்த்து முடிக்குங்கால் முன்னிலைப்பன்மைவினைமுற்றால் முடிக்க.

(வ - று.) நீயும் அவனும் போனீர்.

(98) உயர்திணைப்படர்க்கைச்சொல்லையும் அஃறிணைப்படர்க்கைச்சொல்லையும் கூட்டி முடிக்குங்கால் உயர்திணைப்பலர்பால்வினைமுற்றால் முடிக்க.

(வ - று.) அவனும், குதிரையும் போனார்கள்.

(99) உயர்திணைத் தன்மைச்சொல்லோடு அஃறிணையைக் கூட்டி முடிக்குங்கால் தன்மைப்பன்மைவினைமுற்றால் முடிக்க.

(வ - று.) நானும் குதிரையும் போனோம்.

(100) முன்னிலைச்சொல்லோடு அஃறிணையைக் கூட்டி முடிக்குங்கால் முன்னிலைப்பன்மைவினைமுற்றால் முடிக்க.

(வ - று.) நீயுங் குதிரையும் போனீர்கள்.

(101) வேற்றுமையுருபுகள் விரிந்தேனும், தொக்கேனும் தம்முட்கலந்து பல அடுக்கிவரினும், ஒருருபு வெவ்வேறு பல பெயர்களை அடுக்கிவரினும், வெவ்வேறு வினைகள் பல அடுக்கிவரினும் ஈற்றில் ஒரு முடிக்குஞ் சொல்லைக்கொண்டு முடியும்.

(வ - று.) (*a*) அரசன் பகைவனை வாளால் வெட்டினான்.

(வேற்றுமையுருபுகள் விரிந்து தம்முட்கலந்து ஈற்றில் ஒரு முடிக்குஞ் சொல்லைப்பெற்றன.)

(*b*) அரசன் வாள் கைக்கொண்டான்.

(வேற்றுமையுருபுகள் தம்முட்கலந்து அவ்வாறு முடிந்தன.)

(*c*) சாத்தனையும், கொற்றனையும் வாழ்த்தினான்.

(ஐயுருபு வெவ்வேறு பலபெயர்களை அடுக்கி ஈற்றில் ஒருமுடிக்குஞ் சொல்லைக்கொண்டு முடிந்தது.)

(*d*) ஆடினான் பாடினான் சாத்தன்.

(வெவ்வேறு வினைகள் பல அடுக்கி ஈற்றில் சாத்தன் என்னும் ஒரு முடிக்குஞ்சொல்லைப் பெற்றது.)

(102) வேற்றுமை யுருபுகளுக்கும், பெயரெச்சங்களுக்கும், வினையெச்சங்களுக்கும், வினைமுற்றுக்களுக்கும் அவைகொண்டு முடியுஞ் சொற்களுக்கும் இடையில் அவ்விடத்திற்குப் பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலும் உண்டு.

(வ - று.) சாத்தன் (வயிரார) உண்டான்.
அறத்தை (அழகுபெறச்) செய்தான்.
வாளால் (மாய) வெட்டினன்.

(வேற்றுமையுருபுகளுக்கும் அவைகொண்டு முடியுஞ் சொற்களுக்கும் இடையில் அவ்வாறு வேறுசொற்கள் வந்தன.)

வந்த (தொண்டநாட்டுப்) புலவன்.
சாத்தன்வந்து (அவ்வூர்க்குப்) போனன்.
வந்தான் (அவ்வூர்க்குப்போன) பையன்.

(பெயரெச்ச வினையெச்ச வினைமுற்றுகளுக்கும் அவைகொண்டு முடியுஞ் சொற்களுக்கும் இடையில் அவ்வாறு வேறு சொற்கள் வந்தன.)

**(103) திணை, பால், இடங்களுக்குப் பொதுவாகிய பெயர், வினைகளினது பொதுத்தன்மையை மேலே வரும் சிறப்புப்பெயரும் சிறப்புவினையும் நீக்கி அப்பெயர் வினைகளை ஒன்றற்குரியனவாகச் செய்யும்.**

| | |
|---|---|
| (வ - று.) தாய் இவள்.<br>தாய் இப்பசு.<br>தாய் வந்தாள்.<br>தாய் வந்தது. | பெயரின் திணைப்பொதுத் தன்மையை மேல்வந்த சிறப்புப்பெயரும் சிறப்புவினையும் நீக்கிஅப்பெயரை ஒன்றற்குரியதாகச் செய்தன. |
| ஒருவர் என் தந்தையார்.<br>ஒருவர் என் தாயார்.<br>மரம் வளர்ந்தது.<br>மரம் வளர்ந்தன. | பெயர்களின் பாற்பொதுத் தன்மையை மேலேவந்த சிறப்புப்பெயரும், சிறப்புவினையும் நீக்கி, அப்பெயர்களை ஒன்றற்குரியனவாகச் செய்தன. |
| யாம் எல்லாம் வருவம்.<br>நீவிர் எல்லாம் போமின்.<br>அவர் எல்லாம் இருந்தார். | எல்லாம் என்னும் பெயரின் இடப்பொதுமையை அதற்கு முன்னே வந்த சிறப்புப்பெயரும், பின்னே வந்த சிறப்புவினையும் நீக்கி ஒன்றற்குரிதாகச் செய்தன. |

வாழ்க அவன்
,, அவள்
,, அவர்
,, அது
,, அவை
,, யான்
,, யாம்
,, நீ
,, நீர்

வாழ்க என்னும் வியங்கோள் வினைமுற்றின் திணைபாலிடப் பொதுத் தன்மையினை மேலேவந்த சிறப்புப் பெயர்கள் நீக்கி ஒன்றற்குரியதாகச் செய்தன.

கண்டு வந்தான்
,, வந்தாள்
,, வந்தார்
,, வந்தது
,, வந்தன
,, வந்தேன்
,, வந்தோம்
,, வந்தாய்
,, வந்தீர்

கண்டு என்னும் வினையெச்சத்தின் திணைபாலிடப் பொதுத்தன்மையை மேலேவந்த சிறப்புவினைகள் நீக்கி ஒன்றற்குரியதாகச் செய்தன.

வந்த நம்பி
,, நங்கை
,, மனிதர்
,, (ஒரு) பசு
,, பசுக்கள்
,, நான்
,, நாம்
,, நீ
,, நீர்

வந்த என்னும் பெயரெச்சத்தின் திணைபாலிடப் பொதுத்தன்மையை மேலேவந்த சிறப்புப் பெயர்கள் நீக்கி ஒன்றற்குரியதாகச் செய்தன.

(104) உயர்திணை யொருமைப்பெயர்கள் பலசேர்ந்துவரின் பலர்பால் ஈற்றைப்பெறும்.

(வ - று.) கபிலபரணர், சேரசோழபாண்டியர்.

(105) அஃறிணையொருமைப்பெயர்களும், இருதிணைக்கும் பொதுவான ஒருமைப்பெயர்களும் பல சேர்ந்துவரின் பன்மை ஈற்றைப்பெற்றும் பெறாமலும் வரும்.

(வ - று.) நன்மை தீமைகள். நன்மை தீமை.
தாய்தந்தையர். தாய்தந்தைகள். தாய்தந்தை.

(106) உயர்திணை எழுவாய்ப்பெயரை எழுவாயாக நிற்கும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகை அஃறிணைப்பெயர்களுந் தொடர்ந்து முடியுங்கால் அவ்வுயர்திணைமுடிபையே பெற்று முடியும்.

(வ - று.) நம்பி பொன் பெரியன்—**பொருள்.**
நம்பி நாடு பெரியன்—**இடம்.**
நம்பி வாழ்நாள் பெரியன்—**காலம்.**
நம்பி கண் அழகன்—**சினை.**
நம்பி இன்பம் மிக்கான்—**குணம்.**
நம்பி நடை கடியன்—**தொழில்.**

(107) திணைப்பொருள்கள் தம்மிற்கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும், பாற்பொருள்கள் தம்மிற் கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும், வெவ்வேறு வினைக்குரிய பலபொருள்கள் தம்மிற்கலந்து ஒரு தொடராய் வருமிடத்தும் சிறப்பினலும், மிகுதியினலும், இழிவினலும் ஒரு முடிபைப்பெறும்.

(வ - று.) (*a*) திங்களும் சான்றோரும் ஒப்பர்.

(இதிற் றிணைப்பொருள்கள் கலந்து **சிறப்பினல்** உயர்திணைக் குரிய ஒருமுடிபைப் பெற்றன.)

(*b*) பார்ப்பார் தவரே சுமந்தார், பிணிப்பட்டார், மூத்தோர் குழவி எனும் இவர்.

(இதிற் றிணைப்பொருள் கலந்து **மிகுதியால்** உயர்திணைக்குரிய ஒருமுடிபை ஏற்றன.)

(*c*) மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா.

(இதிற் றிணைப்பொருள்கள் கலந்து **இழிவினல்** அஃறிணைக் குரிய ஒருமுடிபை யேற்றன.)

(d) மனைவியும் தானும் வந்தான்.

(இதில் ஆண்பாலும் பெண்பாலுங் கலந்து சிறப்பினால் ஆண் பாற்குரிய ஒருமுடிபைப் பெற்றன.)

(e) கறியுஞ் சோறும் உண்டான்.
மாலையும் முடியுங் கவித்தான்.

(இவற்றுள், வெவ்வேறு வினைக்குரிய பலபொருள்கலந்து சிறப்பினால் சோற்றுக்கும், முடிக்குமுரிய ஒருமுடிபைப் பெற்றன.)

மற்றவைகளும் இப்படியே.

(108) மகிழ்ச்சியினாலும், உயர்வினாலும், சிறப்பினாலும், இழிவினாலும், கோபத்தினாலும் ஒருதிணைப்பொருள் வேறொரு திணைப்பொருளாகவும், ஒருபாற்பொருள் வேறொரு பாற்பொருளாகவுங் கூறப்படும்.

திணை. (வ - று.) (a) ஓர் ஆவினை "என்னம்மை வந்தாள்" என்பதில் மகிழ்ச்சியினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

(b) பசுங்கிளியார் வந்தார்.

(இதில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாகக் கூறப்பட்டது.

(c) தம்பொருள் என்ப தம் மக்கள்.

(இதிற் சிறப்பினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.)

(d) நான் அரியின் சொத்து.

(இதில் இழிவினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.)

(e) பயனில்லாத சொற்களைச் சொல்வோன் ஒருபதர்.

(இதிற் கோபத்தினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.)

பால். (a) தன் புதல்வனை "என் அம்மை வந்தாள்" என்பதில் மகிழ்ச்சியினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது

(*b*) ஒருவரை "அவர் வந்தார்" என்பதில் உயர்வினுல் ஒருமைப்பால் பன்மைப்பாலாகக் கூறப்பட்டது.

(*c*) "தாதாய் மூவுலகுக்குந் தாயே" என்பதில் சிறப்பினுல் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

(*d*) நெஞ்சில் தைரியமில்லாதானை "இவன்பெண்" என்பதில் இழிவினுல் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

(*e*) "கசையடி பெறுவீர்காளையீரே" என்பதில் கோபத்தினுல் ஒருமைப்பால் பன்மைப்பாலாகக் கூறப்பட்டது.

**(109) ஒருமைப்பாலிற் பன்மைப்பாற்சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பாற்சொல்லையும் சிலவிடத்துத் தழுவிக்கூறுதலும் உண்டு.**

(வ - று.) (*a*) "வெயில் எல்லாம் மறைத்தது மேகம்" என்பதில் ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்தழுவிக் கூறப்பட்டது.

(*b*) "இரண்டு கண்ணுஞ் சிவந்தது" என்பதில் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்தழுவிக் கூறப்பட்டது.

(முற்கூறப்பட்டதில் வரும் ஒருமைப்பால், பன்மைப்பால் மயக்கங்கள் மகிழ்ச்சிமுதலிய பொருள்நோக்கி வருவனவெனவும், இங்குக்கூறிய ஒருமைப்பால் பன்மைப்பால் மயக்கங்கள் அங்ஙனம் பொருள் நோக்காது வருவனவெனவும் உணர்க.)

**(110) ஓரிடத்திற் பிறவிடச்சொல்லைத் தழுவிக்கூறுதலு முண்டு.**

(வ-று.) (*a*) "சாத்தன் தாய் இது செய்வேனே" என்பதில் தன்மைப்பாலிற் படர்க்கையிடச்சொல் தழுவிக் கூறப்பட்டது.

(*b*) "எம்பியை யீங்குப்பெற்றேன் என்னெனக் கரிதென்ருன்" என்பதில் முன்னிலையிடத்தில் படர்க்கை யிடச்சொல் தழுவிக் கூறப்பட்டது.

(c) "நீயோ அவனோ யானோ யாரிதுசெய்தார்" என்பதில் மூன்றிடம் விரவி ஓரிடத்திற் பிறவிடம் வந்தன.

(111) மூன்றுகாலத்திலுந் தொழில் இடையறாமல் நடக்கின்ற பொருளை நிகழ்காலத்தாற் கூறவேண்டும்.

(வ - று.) தீச்சுடும்.
ஞாயிறியங்கும்.
திங்களியங்கும்.
தெய்வமிருக்கிறது.
ஆறொழுகுகிறது.

(112) அவற்றை எதிர்காலத்தாற் கூறுதலும் உண்டு,

(வ - று.) நல்லோனை யாவருஞ் சேர்வர்.
தீயோனை யாவரும் எள்ளுவர்.

(113) விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் ஒருகாலம் வேறொருகாலமாகக் கூறப் படுதலும் உண்டு.

(வ - று.) (a) இனி உண்ண நிற்பான் ஒருவனை உடனழைத்துச் செல்லவந்த ஒருவன் "இன்னும் உண்டிலையோ" எனின் அவன் "உண்டேன்" என்பன், உண்கின்றவனும் அப்படியே சொல்வன்.

(ஆதலால் இவற்றில் விரைவினால் எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்தகாலமாயின.)

(b) நீ அக்காட்டிற் சென்றாற் கூறை பறிகொடுத்தாய்.
நீ அவனை அடித்தாற் சாகிறாய்.

(இவற்றில் மிகுதியினால் எதிர்காலம் இறந்தகாலமும், நிகழ்காலமும் ஆயிற்று.)

(c) எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறினால் மழை பெய்தது.
அறஞ்செய்தாற் சொர்க்கம் புகுகின்றாய்.

(இவற்றில் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமும், நிகழ்காலமும் ஆயிற்று.)

(*d*) யாம் பண்டுவிளையாடுவது இச்சோலை.
யாம் பண்டுவிளையாடுகிறது இச்சோலை.

(இவற்றில் முற்கூறிய காரணங்கள் ஒன்றுமின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்கால நிகழ்காலங்களாயின.)

(114) வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையுஞ் சேரத்தழுவிநிற்கும் ஒரு பொதுச்சொல்லும், வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களை எண்ணிநிற்கும் அவற்றின் சிறப்புச் சொற்களும் ஒரு பொதுவினையைக் கொண்டு முடியும்.

(உ - ம்.) (*a*) அணி அணிந்தார்.
அடிசில் அயின்றார்.

(இவற்றில் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களையுந் தழுவிநிற்கும் பொதுச்சொற்கள் பொதுவினைகளைக்கொண்டு முடிந்தன.)

(*b*) சிலநாட் சோறும், சிலநாண்மாவும், சிலநாட்பாலும், சிலநாணீரும், சிலநாட் சருகும் அயின்றார்.

(இதில் வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களை எண்ணிநின்ற அவற்றின் சிறப்புச்சொற்கள் ஒரு பொதுவினையைக்கொண்டு முடிந்தன.)

(115) வினை, சார்பு, இனம், இடம் முதலியவைகளைப் பொருந்திக் குறித்தபொருள் விளக்கிநிற்கும் பலபொருள் ஒருசொற்கள் அடையின்றிக் கூறப்படும். அவ்வினைமுதலியவற்றைப் பொருந்தியும் குறித்த பொருளை விளக்காத பலபொருள் ஒருசொற்கள் சிறப்பான அடைசொற்கள் கூட்டிக் கூறப்படும்.

(உ - ம்.) (*a*) மாப்பூத்தது.

(இதிற் பலபொருள் ஒருசொல்லாகிய 'மா' என்பதற்குப் பொருள் 'மரம்' என்பது 'பூத்தது' என்னும் வினையால் விளங்கியது.)

(b) மாவீழ்மலர்.

(இதில் வண்டென்பது 'மலர்' என்னுஞ் சார்பால் விளங்கியது.)

(c) காலாள், கரி, மா, இரதம் இவை நாலங்கம்.

(இதிற் 'குதிரை' என்பது காலாள், கரி, இரதம் என்னும் இனத்தால் விளங்கியது.)

(d) மால்மார்புறைமா.

(இதில் திருமகள் என்பது மால்மார்பு என்னுஞ் சார்பால் விளங்கியது.)

(e) மா ஏறினன்.

(இதில் மா என்பது ஏறினன் என்னும் வினையைச் சார்ந்தும் இன்னபொருளதென விளங்காமையின் அதற்கு ஈண்டுப் பாய்மா, மாமா என அடைகொடுக்கவேண்டும். (பாய்மா—குதிரை. மாமா—மாமரம்.)

(116) எழுத்தினியல்பு வேறுபடாமற் பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறும்படி நிற்குந் தொடர்மொழிகள் குறித்துக் கூறுஞ் சொற்களின் இறுதியும் முதலுந்தோன்ற இசையறுத்துக் கூறும் வேறுபாட்டினாலே தெளியப்படும்.

(வ - று.) (1) செம்பொன்பதின்றொடி.

(2) நாகன்றேவன்போத்து.

(இவற்றுள் முதலதைச் செம்பொன் + பதின்றொடி என இசையறுத்துக் கூறினால் செம்பொன் பத்துப்பலம் எனவும், செம் + பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறினால் செம்பு ஒன்பது பலம் எனவும் பொருள்படும். தொடி - பலம்.)

இரண்டாவதை நாகன் + தேவன் + போத்து என இசையறுத்துக் கூறினால் நாகனும் தேவனும் போத்தும் எனவும், நாகன்றே +

வஞ்போத்து என இசையறுத்துக் கூறினுல் இளமையானதன்று, முதிர்ந்த எருமைக்கடா எனவும் பொருள்படும்.

(117) ஒரு பொருளின்மேற் பலபெயர் வருமாஞல் பொருளொன்றே என்பது தோன்ற இறுதியிலே ஒரு வினைகொடுத்து முடிப்பர். அப் பலபெயர்களாலுங் குறிக்கப்படும் பொருள் ஒன்றே என்பது தெளிய நின்றவிடத்துப் பெயர்தொறுந் தனித்தனி வினைகொடுத்து முடிப்பது முண்டு.

(வ - று.) ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான்.
(இதில் இறுதியில் ஒருவினை கொடுக்கப்பட்டது.)

* கண்ணன் வருக மறைமுடிசேர் கழலன் வருக முழுநீல
வண்ணன் வருக வென்னுயிரின் வரதன் வருக மார்பகத்தோர்
பெண்ணன் வருக வுலகேழும் பெற்ரேன் வருக வெழில்வெயின்
பண்ணன் வருக பேரின்பப் பதத்தன் வருக வருகவே.

(இதிற் கண்ணன், கழலன், வண்ணன், வரதன், பெண்ணன், பெற்ரேன், பண்ணன், பதத்தன் என்பன திருமால் என்னும் ஒருபொருளே என்பது தெளியநிற்றலால் பெயர்தோறும் வருக என வினை கொடுக்கப்பட்டது.)

(118) நிலமும், சாதியும், குடியும், உடைமையும், பண்பும், தொழிலும், கல்வியும் என்னும் இவை முதலியவற்றைப்பற்றிவரும் சிறப்புப்பெயருடனே இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின் அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம். (நிலம் என்பது நாடுமுதலியன.)

(வ - று.) (a) பேரூரான் வரதன் - நிலம்.
(b) பார்ப்பான் பராயணன் - சாதி.
(c) சேரன் குலசேகரன் - குடி.
(d) பொன்னன் பொறையன் - உடைமை.

* இச்செய்யுள் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட தனிச்செய்யுட்டிரட்டில் இருக்கின்றது.

(e) கரியன் கண்ணன் - பண்பு.
(f) நடையன் நாகப்பன் - தொழில்.
(g) ஆசிரியன் அகத்தியன் - கல்வி.

வரதன் பெருமான் எனவும், பராயணன் பார்ப்பான் எனவும், குலசேகரன் சேரன் எனவும், பொறையன் பொன்னன் எனவும், கண்ணன் கரியன் எனவும், நாகப்பன் நடையன் எனவும், அகத்தியன் ஆசிரியன் எனவும் இவை இக்காலத்து மாறிவரப் பெறுமாயினும் அங்ஙனம் வருதல் சிறப்பன்று.

(இதனால் பக்தவச்சலம் பிள்ளை, கிருஷ்ணசாமி முதலியார், ராமசந்திர ஐயங்கார், ஸ்ரீநிவாச ஐயர் என இயற்பெயர்க்குப் பின் ஜாதிப்பெயரைச் சேர்த்துக்கூறுதல் முற்காலத்திய வழக்கன்று என்பதும், அது பிற்காலத்திய வழக்கமேயா மென்பதும், அங்ஙனம் வழங்குதல் சிறப்பன்றாம் என்பதும் நன்கு விளங்குதல் காண்க. அது மரபன்று என்பதை பண்டைய பனுவல்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூற்களிற் காணப்படும் புலவர்கள் அரசர்கள் முதலியோர் பெயர்களாலு நன்கறிதலாகும்.)

(119) படர்க்கை யிடத்தனவாகிய உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், பொதுப்பெயர் என்னு மூவகைப் பெயர்கள் வினையை முடிக்குஞ் சொல்லாகப் பெற்றுவரின் அப்பெயர்களோடு வரும் சுட்டுப்பெயர்கள் அவற்றின் பின் வரும். அவை பெயரை முடிக்குஞ் சொல்லாகப்பெற்று வரின் அவற்றோடு வரும் சுட்டுப்பெயர் முன்னும் பின்னும் வரும்.

(செய்யுளில் இந்நியதியின்றி ஏற்றபடி வரும்.)

(வ - று.) (a) நம்பிவந்தான்; அவனுக்குச் சோறிடுக.
குதிரை வந்தது; அதற்குப் புல்லிடுக.
சாத்தன் வந்தான்; அவனுக்குப் பலியிடுக.
சாத்தன் வந்தது; அதற்குப் புல்லிடுக.

(இவற்றுள் முடிக்குஞ்சொல் வினையாக வந்தமையின் சுட்டுப் பெயர் அம்மூவகைப்பெயர்களுக்கும் பின்வந்தது.)

(b) நம்பி அவன்.
அவன் நம்பி.

(இவற்றில் முடிக்குஞ் சொல் பெயராக வந்தமையின் சுட்டுப் பெயர் முன்னும் பின்னும் வந்தது.)

(இங்ஙனம் வரும் சுட்டுப்பெயரின் வருஞ் சுட்டெழுத்து அகரமேயாம். நம்பி இவன், இவன் நம்பி எனச் சிறுபான்மை இகரமும் வருதல் உண்டு.)

(120) சில இடங்களிற் சொற்கள் பல அடுக்கிவருதலும் உண்டு. அங்ஙனம் அடுக்கிவருவன அசைநிலையாயின் இரண்டு சொற்களும்; விரைவு, கோபம், மகிழ்ச்சி, அச்சம், துன்பமுதலிய பொருள் குறித்தனவாயின் இரண்டு சொற்களும், மூன்று சொற்களும்; இசை நிறையாயின் இரண்டு சொற்களும், மூன்று சொற்களும், நான்கு சொற்களும் அடுக்கிவரும்.

(வ - று.) (a) அன்றே யன்றே - அசைநிலை.

(b) (1) உண்டேன், உண்டேன்.
போ போ போ. } விரைவு.

(2) எய் எய்.
எறி எறி எறி. } கோபம்.

(3) வருக வருக.
பொலிக பொலிக பொலிக. } மகிழ்ச்சி.

(4) பாம்பு பாம்பு
தீத்தீத்தீ } அச்சம்.

(5) உய்யேன் உய்யேன்.
வாழேன் வாழேன் வாழேன். } துன்பம்.

(c) ஏ ஏ
நல்குமே நல்குமே நல்குமே
பாடுகோ பாடுகோ பாடுகோ
பாடுகோ. } இசைநிறை.

(121) சில இடங்களிற் பிரியாமல் நின்று பொருள்படும் இரட்டைச் சொற்கள் வருதலும் உண்டு. அவற்றிற்கு இரட்டைக்கிளவி என்றுபெயர்.

(வ - று.) கொள கொள கொதித்தவன்றே.
சல சலவென மதமிழிதர.
குறு குறு நடந்து வந்து.

(முன்னே சொன்ன அடுக்குத்தொடருக்கும் இதற்கும் உள்ள வேறுபாடென்னை எனின், அடுக்குத்தொடர் பிரிந்திசைத்துப் பொருள் தரும். இது பிரிந்திசைத்துப் பொருள்தராது என்பதே.

(122) ஒருபொருளைக்குறித்துப் பலபெயர்கள் வருமாயின் அவற்றை அப்பொருளினின்றும் பிரிதலில்லாதன வாயின் கொள்வர். பிரிதலுள்ளனவாயின் கொள்ளார்.

(வ - று.) (a) ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான்.

(இதில் ஆசிரியன் என்பதும், பேரூர்க்கிழான் என்பதும், சாத்தன் என்பதும் ஒருபொருளின்மேற் சென்று கேட்போர்க்குக் குறித்தபொருளை விளக்கிநிற்றலின் இவை பிரிதலில்லாதனவாமென்க.)

(b) எழுத்துணர்வில்லோன் இலக்கண நிறைகடல்.

(இதில் எழுத்துணர்வில்லோன் என்பதும், இலக்கண நிறை கடல் என்பதும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாமையின் இவை பிரிதலுள்ளனவா மென்க.

(123) பலசொற்கள் ஒருபொருள்மேல் வந்து செவிக்கு இன்பம்பட நிற்குமாயின் அவற்றைக் குற்றமெனத் தள்ளாமற் கொள்வர்.

(வ - று.) மீமிசைஞாயிறு.
புனிற்றிளங்கன்று.
நாகிளங்கமுகு.
உயர்ந்தோங்குபெருவரை.
குழிந்தாழ்ந்தகண்.

(124) இவ்வளவென்று அறியப்படும் பொருளும், எக்காலத்தும், எவ்விடத்தும் இல்லாத பொருளும் முடிக்குஞ் சொல்லோடு சேரும்போது அவற்றோடு முற்றுப் பொருள்தரும் உம்மையைச் சேர்க்கவேண்டும்.

(வ - று.) (a) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்.

(இது இவ்வளவென் றறியப்படும் பொருள்.)

(b) முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை.

(இவை எக்காலத்தும் இல்லாதவை.)

(c) ஒளிமுன்னிருள் எங்குமில்லை.

(இது எங்கு மில்லாதது.)

(125) ஓரடையும் ஒருசினையும் ஒருமுதலும் ஒன்றை யொன்று விசேஷித்தும், ஈரடைமுதலையாவது சினையை யாவது விசேஷித்தும், அடையடுத்துவரும் பலசினைகள் ஒருமுதலை விசேஷித்தும் வரப்பெறும்.

(வ - று.) (a) செங்கால்நாரை.

(இதில் செம்மை என்னும் அடை கால் என்னும் சினையை விசேஷிக்கக் கால் என்னும் சினை நாரை என்னு முதலை விசேஷித்தமை யறிக.)

(b) சிறுகருங்காக்கை.

(இதிற் சிறுமை, கருமை என்னும் இரண்டடைகள் காக்கை என்னும் ஒரு முதலை விசேஷித்தமை யறிக.)

(c) சிறுகருங்கண்.

(இதிற் சிறுமை, கருமை என்னும் இரண்டடைகள் கண் என்னுஞ் சினையை விசேஷித்தமை யறிக.)

(d) பெருந்தோட் சிற்றிடைப் பேரமர்க்கட் பேதை.

(இதிற் பெருமை என்னும் அடையடுத்த தோள் என்னும் சினையும், சிறுமை என்னும் அடையடுத்த இடை என்னும் சினையும், பேரமர் என்னும் அடையடுத்த கண் என்னும் சினையும் பேதை என்னு முதலை விசேஷித்தமை யறிக.)

வாக்கிய இலக்கண சிந்தாமணி

முற்றிற்று.

# புஸ்தக விளம்பரம்.

**நாமாவளிகதம்பம் 1-ம் பாகம்:** (இதில் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, ஸ்ரீ ந்ருஸிம்ஹ அஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹ அஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ ராமாஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ க்ருஷ்ணஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ லக்ஷ்மிநாராயணஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ ஸூர்ய நாராயணஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ ஸரஸ்வதி அஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ ஆஞ்ஜநேயாஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்ரீ ஹரிஹராஷ்டோத்தர ஶதநாமாவளி இவைகள் ராயல் 32 பேஜ் பாக்கெட் அளவில் உயர்ந்த காகிதத்தில் ஸம்ஸ்க்ருத உச்சரிப்புக்கிணங்க சுத்தப்பிரதியாகப் படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன) ஸ்டிப் பைண்டு ... 0 4 0

ஷை உயர்ந்த கித்தான் பயிண்டு ... ... ... 0 5 0

ஆழ்வார்கள் உயிர்வருக்கமாலை ... ... ... 0 0 3

**இங்கிதமாலை விருத்தியுரையுடன்** (திருவருட்பிரகாசவள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிக ளருளிச்செய்த திருவருட்பாத் திருமுறையுள் இன்பரசமாயும் பக்திரசமாயும் அமையப்பெற்றது) ... ... ... ... ... 0 10 0

திருவண்ணமலை அருணசலேசுவரர் பதிகம், உண்ணமுலையம்மைபதிகம், தீபதரிசன சரித்திரச்சுருக்கம், சர்வாலய தீபதரிசன சரித்திரச்சுருக்கம் வசனம் ... ... ... ... 0 1 0

பட்டினத்துப்பிள்ளையார் உடற்கூற்றுவண்ணம், தாயுமானசுவாமிகள் வண்ணம் ... ... ... ... 0 0 3

**வாக்கிய இலக்கண சிந்தாமணி:** (இதில் மாணக்கர்கள் இன்றியமையாதறியத்தக்க இலக்கணக்குறிப்புகளோடு வாக்கியம் வரையும் வகைகள் செப்பமாக எழுதப்பட்டிருக்கின்றன. கல்வி யபிவிருத்தியின்பொருட்டு இப்புஸ்தகத்தைப் படிப்பவர் தவறின்றி வாக்கியம் வரையும் வகையை நன்குணர்வர். வாக்கிய இலக்கணத்திற்கு அங்கமாக எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் முதலில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இக்காலம் மாணவர் கட்டுரை யெழுதும் செய்கையில் அவர்க்குப் பயன்செய்வதாயுள்ளது. இதற்கு மஹாமஹோபாத்தியாயர் ப்ரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய வித்வசிரோமணிகள் தமிழிலும் இங்கிலீஷிலும் சிறந்த அபிப்பிராயம் கூறியிருக்கின்றனர்) ... 0 4 0

ஸ்தோத்ரகதம்ப வ்யாக்யாநம் 1-ம் பாகம் : அபிராமியந்தாதி விருத்தியுரையுடன் (இதில் மூலம், பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, நூதனமாக எழுதிச்சேர்க்கப்பெற்ற அபிராமிபட்டர் வரலாறு இவை யடங்கியிருக்கின்றன ; தேவியினுடைய பிரசாதத்தைப்பெற விரும்புவோரெல்லாம் பாராயணஞ்செய்யும் பெருமை வாய்ந்தது ; உயர்ந்த பதிப்பு) ... ... ... 0 5 0

திருநீலகண்டநாயனர் சரித்திரக்கீர்த்தனை : (இதில்பல அற்புதக்கீர்த்தனங்கள் அடங்கியிருக்கின்றன; ஒவ்வொரு கீர்த்தனமும் எற்றெதுகை, அடியெதுகை, நடுமோனை முதலிய இலட்சணங்களோடும், மனத்திற்கு உல்லாசத்தைத்தரும் இராகதாளங்களோடும், சிறுவரும் இனிமையாகப்படித்துச் சந்தோஷிக்கும் விதத்தில் தெளிவான தமிழ்ச்சொற்களால் பாடப்பெற்றிருக்கின்றது)... 0 1 0

சரஸ்வதி ஒருபா ஒருபது (இது கல்விக்குரிய தெய்வமாகிய சரஸ்வதி தேவியை இளைஞர்முதல் யாவரும் வாழ்த்துதற் குரியதாம்படி இனிதினமைக்கப்பெற் றிருக்கின்றது. இந்நூலில் செய்யுளின் உறுப்புகள் ஆறனுள் ஒன்றாயுள்ளதும், மிகக் கஷ்டமானதெனத் தோன்றுவதுமாகிய 'தொடை' என்னும் உறுப்பின் வகைகள் 43-ம் மாணவர்கள் மிகச்சுலபமாக உணர்ந்துகொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன) ... ... ... 0 0 9

நித்தியானந்த சோதிட சர்வார்த்த சாரசங்கிரகம் : (ஜோதிடம் கற்கப் பிரியப்படுபவர்களுக்குத் திறவுகோல்போன்றது) 1-ம் பாகம் உயர்ந்த பதிப்பு ... ... . ... 0 6 0

சிவதருமோத்தரம் மூலமும் உரையும் : (இது சைவாகமம் இருபத்தெட்டினுள் 24-வது சந்தானசர்வோத்தமத்தின் உபபேதம் பதினென்றினுள் எட்டாவதாயுள்ளது) ... ... 2 0 0

குடும்பசாஸ்திரம் என்னும் சவுக்கியசாஸ்திரம் வசனம் .. 1 8 0

கர்ப்பசாஸ்திரம் வசனம் படங்களுடன் ... ... 1 8 0

☞ மேலே குறிப்பிட்டவை யாவும் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டசுத்தப்பதிப்புப்புஸ்தகங்கள். இவற்றிற்குத்தபாற்கூலி முதலியன பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற் குறிப்பிட்ட விலாசத்திற்கு எழுதி வி. பி., மூலமாகத் தருவித்துக்கொள்ளலாம்.

☞ அ. இராமாநுஜசெட்டி அண்டு சன்,

நெம். 288, இலிங்கசெட்டி வீதி,

முத்தியாலுப்பேட்டை, ஜார்ஜ் டவுன், சென்னை.